# மதங்களும் மதநம்பிக்கைகளும்

ஆசிரியர்:
வண. வீ. ந. தர்மகுலசிங்கம்
கிறிஸ்தவ இறையியல்க் கல்லூரி,
மருதனார்மடம்.

2000

G. S. Robinson
[illegible]

# மதங்களும் மதநம்பிக்கைகளும்

ஆசிரியர்:

வண. வி. ந. தர்மலிங்கம்

[illegible] இறையியல் கல்லூரி,

மருதனார்மடம்

[illegible]

# மதங்களும் மதநம்பிக்கைகளும்



ஆசிரியர்:
வண. வி. ந. தர்மகுலசிங்கம்
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம்.

2000

# முன்னுரை

கிறிஸ்தவ திருப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு காணும் நான் சில ஆக்கபூர்வமான காரியங்களை அதன் ஞாபகமாக செய்ய ஏவப்பட்டேன். அவற்றில் ஒன்றாக ''மதங்களும் மதநம்பிக்கைகளும்'' என்ற இந் நூலை கிறிஸ்தவ, இந்து மதங்கள் பற்றிய அறிமுக நூலாக எழுதி வெளியிடுகிறேன். இதனை வாசிப்பதன் மூலம் நமது சூழலில் இருக்கும் மதநபபிக்கைகளைப் புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறேன். இந்நூலில் குறைபாடுகள் இருப்பின் அதனை எழுத்துமூலம் கீழ்ழ கொடுக்கப்படும் எனது விலாசத்திற்கு வாசகர்கள் தந்து உதவலாம்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதித் தந்த திருமதி. கிருபா பவசிங்கம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மேலும் இந்நூல் அச்சிட்டு வெளியிடப்பட ஊக்கம் தந்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

வண. வீ. ந. தர்மகுலசிங்கம்
(விரிவுரையாளர்)
கிறிஸ்தவ இறையியல்க் கல்லூரி,
மருதனார்மடம்.

# அணிந்துரை

அருட்திரு. V. N. தர்மகுலசிங்கத்தினால் எழுதப்பட்ட மதங்களும், மத நம்பிக்கைகளும் எனும் நூலுக்கு அணிந்துரை எழுதும் சந்தர்ப்பத்தை தந்த அந்த அடியானுக்கு என் நன்றிகள் மட்டுமல்ல எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இவரால் வெளியிடப்படும் நூல் இரு பாகங்களைக் கொண்டது. மதங்கள் என்ற ரீதியில் இந்து மதமும் கிறிஸ்த்தவமும் அடங்குகின்றன. அடுத்ததாக இந்து மத நம்பிக்கைகளும் கிறிஸ்தவ சமய சிந்தனைகளும் என்ற விளக்கத்துடன் எழுதப்பட்டுள்ளன.

இந்து மதம் என்ற பகுதியில் இந்து மதத்தின் பிறப்புக் காலமென அறிஞர்களால் கருதப்படும் சிந்து வெளியில் இருந்து அத்தகைய காலம் வரை விளக்கப்படுகின்றது. வட நாட்டு ஆறுமத நெறிகளும் வேதங்கள், உபநிடதம் இதிகாசங்கள் தாபசாஸ்த்திரங்கள் கூறும் இந்து மத கோட்பாடுகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சங்கம் முதல் பல்லவர் காலம் வரை சைவ வைணவ அடியார்களது கோட்பாடுகள் விளக்கப்படுகின்றன.

அடுத்த அதிகாரமான கிறித்தவ சமய சிந்தனைகள் என்ற பகுதியில பரிசுத்த வேதாகமத்தின பழைய புதிய ஏற்பாடுகளை ஆதாரமாகக கொண்டு கிறஸ்தவ சிந்தனைகள் இரத்தினச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

எழுத்தாளனின் உள்ளத்தைத் தொட்ட சில சிந்தனைகள் வாசகர் உள்ளங்களையும் தொடும் என்பதில் ஐயமில்லை. இறைனை அன்பான பிதாவாக கடவுள் மனித உறவாக வேதாகமத்தைத் தொட்டு விளக்கப்படுகிறது. தந்தை மைந்தன் உறவு எவ்வாறு வேதாகமத்தில் பேணப்படுகிறதோ அதனை கிறிஸ்தவர்களும் பேணவேண்டும் என்ற தோனி இந் நூலில் அடி நாதமாக நாதக்காக

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்த பவும் மனித வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதை கோதுமை மணியின் உவமை மூலம் விளக்கும் பகுதியை எடுத்துக்காட்டி ஒவ்வொரு மனிதனும் முழுமையான மேனியுடைய கோதுமை மணியை போல் பூரண மனிதனாக உலகில் வாழவேண்டும் என்ற அரிய சிந்தனைத் துளி இந்நூலில் விதைக்கப்பட்டுள்ளது. இந்த முழு மனித வாழ்வில் தவறுகள் உணரப்படுதல் (Conviction) அவை அறிக்கை பண்ணப்படுதல் (Confession) பின் ஒப்புரவாக்கப்படல் (Reconciliation) இறுதியாக மகிழ்ச்சியின் அடையாளமான மீட்பின் அனுபவத்தைப் (Conversion) பெறல் என்ற நல்ல வழிகாட்டல் இந் நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இன்றைய அன்பினால் நிறைந்த மனித வாழ்வில் மனித நேயம் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதை எழுத்தாளன் தானடைந்த துன்பவியலுக்கூடாக பெற்ற அனுபவத்தின் விளைவாக இங்கு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். யாக்கோபு தன் சகோதரன் ஏசாவுடன் ஒப்புரவாதல் மனம் திருந்திய மகன் தன் தந்தையுடன் ஒப்புரவாதல் என்பவற்றை எடுத்துக்காட்டி மனித உறவில் ஒப்புரவாதலின் முக்கியத்துவத்தையும் தெளிவாக காட்டியுள்ளார்.

தனது இருபத்தைந்தாவது ஊழிய நிறைவின் நினைவுச் சின்னத்தின் ஒன்றான இச் சிறிய நூல் எழுத்தாளரின் அனுபவப்பெட்டகம் எனக் கூறின் தவறில்லை. தொடர்ந்து தனது எழுத்தாக்கங்களால் கிறிஸ்தவ சமூகத்தினை வழிநடத்த ஆண்டவர் புதுப் பெலன் கொடுக்க வேண்டுமென வாழ்த்தி என் அணிந்துரையை பூரணமாக்கி விடைபெறுகின்றேன.

நன்றி.

திருமதி. கிருபா பவசிங்கம்
B. A. (Hons) M. Phil
Dip. in Ed.
Dip. in. Hindu Civilization

# மதங்களும் மதநம்பிக்கைகளும்

இறைவன் தன்னை மக்களுக்கு வெளிப்படுத்தினார் என்று மக்கள் நம்புகிறார்கள் அவர்களையே நாம் இறை பக்தர்கள் என்கிறோம் இவ்வகையான நம்பிக்கை பெரும்பாலும் ஆசியாக் கண்டத்தில் தோன்றியவையே. இறை வெளிப்பாட்டு நம்பிக்கை பல விதத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது இதனால் சமயங்கள் (மதங்கள்) பலவாயின இச் சமயங்களூடாக இறைவனைப் பற்றிய அறிவைப் பெறுவது இறையியலாகும். இவ் இறையியலைக் கற்போர் சமயங்கள், அவற்றின் தோற்றம், நம்பிக்கைகள் என்பவற்றையும் புரிந்துகொள்ள வேண்டும். குறித்த ஒரு சமயத்தை மாத்திரம் கற்று அதனால் பெருமை அடைவதில் பலனில்லை நமது சமயநம்பிக்கை ஒரு சமயத்தில் நிலைத்திருப்பது அவசியம். ஆனால் ஏனைய சமயங்களையும் நன்கு கற்றுக் கொள்ளுதல் நல்லது. சமயங்களின் அடித்தளம் வேதங்களாகும். ஆதி மனிதன் பேச, எழுதக் கற்றுக் கொண்டபோது கடவுளைப் பற்றியே எழுதினான். இதனால் வேதங்கள் கடவுளின் வெளிப்பாடாயிற்று, கடவுள் மனிதனூடாகப் பேசினார் என்றும் நம்பப்படுகிறது. வேதம் காலத்தால் என்றுமே அழியாதது மனித வாழ்வுக்குப் புத்துயிர் கொடுக்கவல்லது.

இறையியலைக் கற்கும் போது சூழவுள்ள மக்களின் மதநம்பிக்கைகளையும் புரிந்து கொள்ள வேண்டும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதனால் அன்பு மலருகிறது. அப்படியே ஒருவர் மதத்தை ஒருவர் புரிந்து கொள்ளும் போது சீரான மதக் கொள்கை பின்பற்றப்படும், அப்படியே இந்துக்கள் மத்தியில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்த நூல் உதவும். இந்து மதம், கிறிஸ்தவ மதம் பற்றிய நம்பிக்கைகளை காண்போம்.

## இந்து மதம்:

இந்து மதம் சிந்துவெளி நாகரீகத்தில் எழுந்த மதமாகும். இது இந்தியாவில் தோன்றியது என்றாலும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இருந்த நெருங்கிய தொடர்பினால் இங்கும் பரவலாயிற்று. பெரும்பான்மையினரால் தழுவப்படுவது நடப்பியல் இந்துமதமாகும் (Functional Hinduism) பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்படும் மதம் பல்வேறுபட்ட நம்பிக்கைகளை வேண்டிய விதமாக சுதந்திரத்துடன் பின்பறறி அதில் சமரசம் காண்கிறது. இந்து மதத்தினுள் ஆறு மதங்கள் வெவ்வேறான கடவுள் சிந்தனைகளையுடையனவாக இருப்பதைக் காணலாம். அவைகள் சைவம், சாக்தம், வைஸ்ணவம்,

காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன இவை ஒரு குறித்த இறையிணைவு கோட்பாடு (Contemplation) அற்ற வழிபாடாகக் காணப்படும். இவர்கள் பல்வேறு தெய்வங்களை வைத்து வழிபடுவர். இது இறையியல் கற்போருக்கு ஒரு சிக்கலான விடயமாகத் தோன்றும். இதற்குக் காரணம் இறை நம்பிக்கை அனைத்து மனிதரிடமும் காணப்பட்ட போதும் அது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதில்லை என்ற மனநிலை அவர்களிடம் இருப்பதாலேயாகும். பக்திக்கு மாத்திரம் அதிக மதிப்புக் கொடுக்கப்படுகிறது. பல்வேறு தெய்வங்கள் ஏன் வணங்கப்படுகின்றன என்பதனை இந்த மதத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி என்பதனைக் கற்பதனால் மாத்திரம் புரிந்து கொள்ளலாம். இந்து மதத்தினுள் உள்ள மதங்களும் அதன் பண்டிகைகளும் பற்றிய சில குறிப்புக்களை இங்கே காண்போம்.

## அ. சைவம்:

சிவனை முழுமுதற் கடவுளாக போற்றுகிறது. சிவன் மக்களின் துன்பங்களைப் போக்க திருவிளையாடல்களை புரிந்தார் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. சிவனுக்காகக் கொண்டாடும் பண்டிகை சிவராத்திரி, சிவதாண்டவம் சிவனின் ஐந்து கிரியைகளை வெளிப்படுத்துகிறது என்பர் அவை படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல்.

## ஆ. சாக்தம்:

சக்தியை பெண்ணாக தாயாக மூன்று நிலையில் வகுத்துக் காண்பர் சக்திதாயே இவர்களின் முழுமுதற் கடவுள் கொள்கையாகும். சக்தி மூன்று வகைப்படும். கல்வி (சரஸ்வதி), செல்வம் (லக்சுமி) வீரம் (துர்க்கை) இம் மூன்று பெண் தெய்வங்களுக்கும் நவராத்திரிப் பண்டிகை கொண்டாடுவர்.

## இ. வைஸ்ணவம்:

ஆரியர்கள் வடநாட்டில் வைஸ்ணவ மதக் கொள்கையை உடையவர்களாக இருப்பர் இவர்களின் முழுமுதற் கடவுள் விஸ்ணு. இவர் காத்தல் கடவுளாகவும் போற்றப்படுவர். இவர் பக்தர்களைக் காக்க அவதாரம் எடுப்பவர் என்று நம்பப்படுகிறது. தீபாவளிப் பண்டிகை வைஸ்ணவப் பண்டிகையாகும்.

## ஈ. காணபத்தியம்:

விநாயகரை முழுமுதற் கடவுளாகக் காணும் மதம். விநாயகர், கணபதி, விக்கினேஸ்வரர், ஏகநந்தன், ஐங்கரன் என்னும்

பெயர்களால் போற்றப்படுவர். இவரை ஞானக் கடவுள் என்றும் போற்றுவர். விநாயகர் சதுர்த்தி ஆவணி மாதத்தில் கொண்டாடப் படும்.

## உ. கௌமாரம்:

இம் மதத்தின் முழுமுதற் கடவுள் முருகனாகும். இவரைக் குமரக் கடவுள் என்றும் போற்றுவர் இவரை கார்திகேயன் என்றும் சேயோன் என்றும் போற்றுவர். கார்த்திகை விளக்கீட்டுப் பெருநாள் இவரை நினைவுபடுத்திக் கொண்டாடும் பண்டிகையாகும்.

## ஊ. சௌரம்:

சூரியனை முழுமுதற் கடவுளாக கொண்ட மதம். இம்மதக் கொள்கைகள் வேறுசில நாடுகளிலும் காணப்படுகிறது. தைப்பொங்கல் பண்டிகை இம் மதத்தினரால் கொண்டாடப்படுகிறது.

மேற்படி ஆறு மதங்களும் இந்து மதமாக கடவுளர்களை ஒரு குடும்ப ஐக்கியத்துக்குள் கூட்டி சேர்க்கிறது. சிவன் தந்தைக் கடவுளாகவும், சக்தி தாய்க் கடவுளாகவும் முருகன், விநாயகர் முதலியோர் பிள்ளைக் கடவுளாகவும், விஸ்ணு சிவனின் மைத்துன ராகவும் புராணங்கள் மூலம் சித்தரிக்கப்படுகின்றனர். இவர்கள் தனித்தனி முழுமுதற் கடவுளர்களாக போற்றப்பட்ட போதிலும் இந்து மதம் என்ற போர்வையில் ஒன்றிணைகிறது.

# இந்துமத வேதங்களும் மறுமலர்ச்சி சிந்தனைகளும்:

இந்துமத வேதங்கள் நான்கு. அவையாவன ரிக்வேதம், யசூர்வேதம், அதர்வணவேதம், சாமவேதம், என்பனவாகும். வேதங் களை நான்கு பகுதிகளாகக் காணலாம். அவை பிராமணங்கள், சங்கிதைகள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்பன. இவை பாடல் வடிவத்தில் மண்டலங்களாகவுள்ளன. இவற்றில் உபநிடதம் என்பது அடிக்கருத்தைத் தருவது. இதனால் இது வேதாந்தம் எனப்படும். இது ஆங்கிலத்தில் (Upanishad) எனப்படும். இந்த உபநிடதத்தின் சாரத்திற்கு புராணங்கள் மூலம் விளக்கம் கொடுக்கப்படுகிறது. அதனை இதிகாசங்கள் என்றும் கூறுவர். இவற்றுள் பாரதம் இரா மாயணம் ஆகிய இதிகாசங்கள் என்பன சிறப்பானவை இவை வாழ்வியல் முறைகளை ஒரு தர்மமாக வெளிப்படுத்துகின்றன. இதனால் இந்துமதம் சனாதன தர்மம் எனவும் அழைக்கப்படுகிறது மத. யஜ்னவல்கியர், பராசரர் போன்றவர்கள் வாழ்க்கை நெறி. முறைகளை ஒரு வாழ்க்கை நெறியாகக் கூறியுள்ளனர். இது தர்ம

சாஸ்திரம் எனப்படும். இவ்வேதங்களின் மொழி நடையை ஆராய்ந்தவர்கள் இதன தோற்ற காலத்தையும் மதிப்பீடு செய்தனர். வேதங்களின் மொழி நடையில் ஆரிய மொழியினதும், திராவிட மொழியினதும கலப்பு இருப்பதால் ஆரியர் இந்தியாவினுட் புகுந்த காலத்திற்கு பின்னரே வேதங்கள் எழுதப்பட்டது. என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. வேதம் எழுந்த காலம் வேதகாலம் என்றும் அதன்பின் பிராமண காலம் என்றும் அழைக்கப்பட்டது. பிராமண காலத்தில் தான் பல்வேறு சடங்குகள், அதனை நடப்பிப்பவர்கள் போன்ற பிரிவினர்கள் தோன்றினர். பிராமணர், சத்திரியர், வைசியர் சூத்திரர் என்ற பிரிவுகள் இவ்வடிப்படையில் தோன்றியவையே. மனித உறுப்பினடிப்படையில் இவைகள் பிரிக்கப்பட்டிருப்பதை அறியலாம். இதற்கு மனு கொடுத்த விளக்கம் ஒன்று உண்டு. பிராமணர் தலைப்பகுதியையும், சத்திரியர் தோள்ப்பகுதியையும், வைசியர் முண்டப்பகுதியையும், சூத்திரர் கால்ப்பகுதியையும் குறிக்கும். பிராமணர் அறிவை கொடுப்பவர்கள், சத்திரியர் நாட்டை காப்பவர்கள், வைசியர் உணவு உற்பத்தி வியாபாரம் செய்பவர்கள், சூத்திரர் அனைவருக்கும் தொண்டு செய்பவர். இப்படியாக வர்ணாசிரமதர்மம் ஒன்று உண்டு. இவர்கள் பிராமணர் முப்பிரிநூல் தரிப்பதினாலும், சத்திரியர் பட்டு நூல் தரிப்பதினாலும், வைசியர் ஒற்றை நூல் தரிப்பதன் மூலம் அடையாளம் காணப்படுவர். சூத்திரர்களுக்கு இவ்வகை அடையாளம் இல்லை. இம்முதல் மூன்று அடையாளங்களை ஆரியர்கள் பெற்றிருப்பதையும், திராவிடர் என்று போற்றப்படும் இந்திய மூத்த குடிகள் இவ்வடையாளங்கள் அற்றவுர்கள், தூய்மைச் சடங்கிலும் கூட இவ்வகை வேறுபாடுகள் உண்டு. இதனால் திராவிடாகள் தூய்மைச்சடங்கிற்காக முப்பத்தொரு நாட்கள் காத்திருப்பர்.

சங்ககாலம் முதல் கி. பி. 13ம் நூற்றாண்டுவரை இந்து சமய வரலாற்றில் முக்கியம் வாய்ந்த காலமாகும். உட்சமய முரண்பாடுகள் (பௌத்தம் – சமணம்) தமிழ் மொழியின் வளர்ச்சி உபநிடத விளக்கம், அறநெறி நூல்கள் எழுதப்பட்டமை, நாயன்மார்கள், ஆழ்வார்கள் தோன்றியமை போன்ற நிகழ்வுகள் இக்காலத்தில் இடம் பெற்றன.

## சங்க காலம்:

சங்க காலத்தின் தோற்ற காலம் பற்றித் திடமாகக் கூற முடியாது. ஆனால் சங்ககாலம் இருந்தது என்பதற்கு சங்க காலத்துச் செய்யுள்களே சான்றாகும்.

'' தென் தமிழ் நாட்டகன் பொதியிற் திருமுனிவன் தமிழ்ச்
சங்கம் சேர்கிற்பீரே லென்றுமவ னுறைவிடமாம் ''

(கம்ப நாடவிட்ட படலம்)

இச்செய்யுளில் குறிப்பிடப்படும் முனிவர் அகத்தியர் என்றும், அவர் முதலிரண்டு சங்கங்களிலும் இருந்தார் என்றும் நம்பப்படுகின்றது சங்ககாலம் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று வகைப்படும், இவற்றின் நோக்கம் தமிழை வளர்ப்பதாகும். சங்கம் என்பது புலவர் கூட்டமாகும். இச்சங்கம் பாண்டிய மன்னர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் மூலம் முத்தமிழும் வளர்க்கப்பட்டது சங்க காலத்தில் தோன்றிய தொல்காப்பியத்தில் ''இறையனார் அகப் பொருள்'' என்ற பகுதியில் சோமசுந்தரக் கடவுள் புலவராகத் தோன்றி எழுதினார் என்ற குறிப்பு உண்டு. இறையனார் என்பதன் மறுபொருள் சிவபெருமான். வேதங்களில் உருத்திரர் என்று குறிப்பிடப்படும் கடவுளும் இவரே.

சிவபெருமான் சைவர்களின் முழுமுதற் கடவுள். இதனால்த் தான் தமிழ் என்றால் சைவம், சைவம் என்றால் தமிழ் என்று போற்றப்படுகிறது. இப்படியே மேலும் பல தெய்வங்களைப் பற்றிய கூற்றுக்கள் சங்க நூல்களில் உண்டு.

## ஐவகை நிலங்கள்:

பூமியானது ஐந்து வகை நிலங்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு நிலத்திலும் ஒவ்வொரு தெய்வத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகரீகம் நதிக்கரையில் உண்டானது என்பது வரலாறு கண்ட ஒரு உண்மையாகும். நதி மலையில் உற்பத்தியாகி ஐந்து வகை நிலங்களூடாகப் பாய்ந்து கடலோடு கலக்கிறது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்பன. இந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் அந்தந்த நிலத்திற்கேற்றபடி தமது வாழ்க்கையை அமைத்தனர். அவ்வாறே கடவுளைப் பற்றிய சிந்தனையையும் உருவாக்கிக் கொண்டனர்.

### அ. குறிஞ்சி:

குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். அது என்றுமே பச்சைப் பசேலென்று இருக்கும். இந்த அழகுச் சூழலில் வாழ்ந்தவர்கள் தாம் வழிபட்ட தெய்வத்தையும் அழகானதாகவே நோக்கினர் எனவே அழகு என அர்த்தம் கொள்ளும் முருகு அத் தெய்வத்திற்குப் பெயரானது. முருகு அவன் முருகன் என்றானது. அவன் மலைத் தெய்வமாகக் கருதப்பட்டான். மலை ஜாதியானைப் போன்ற தோற்றம் கொண்டான். சங்கப் புலவர் நக்கீரர் முருகனைப் பற்றி திருமுருகாற்றுப் படையில் பாடியிருக்கிறார். சேயோன் என்றும் செந்நிறக் கடவுள் என்றும் சுப்பிரமணியர் என்றும் முருகனுக்குப் பெயர்களுண்டு. கட்டுக்கள் அற்றவன் என

அர்த்தங்கொள்ளும் கந்தன் என்னும் பெயருண்டு. இந்திரன் இதிந் ராணியின் மகள் தெய்வானையின் மணாளன் என்று கந்தபுராணம் கூறுகிறது. அத்துடன் தினைப்புலம் காத்த வள்ளியினதும் மணாளன் சூரபன்மனை மேற்கொண்டு அவனை மயில் வாகனமாகவும் சேவற் கொடியாகவும் ஆக்கியவன். இப்படியாகப் பல புராண விளக்கங்கள் முருகனுக்குண்டு.

## ஆ. முல்லை:

முல்லை என்பது காடும் காடு சார்ந்த இடமும் ஆகும். அது பருவ காலங்களை வெவ்வேறாகக் காணக்கூடிய இடமாகும். இந்தச் சூழலில் வாழ்ந்த மக்கள் பருவகாலங்கள் மாறும் நிலையை மாயை என்றுணர்ந்தனர். இதனால் அக்கடவுள் மாறுபவன் என அர்த்தங் கொள்ளும் மாயவன், மாயோன் அல்லது விஷ்ணு என அழைக்கப்பட்டான். நீல நிறக் கடவுள் என்றும் கூறுவர். மாயவன் என்பது அவதாரமெடுப்பவன் என்று பொருள் பெறும்.

## இ. மருதம்:

மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமும். மருத நிலத்தின் தெய்வம் இந்திரன். இந்திரனை தேவர்களின் தலைவன் என்றும் போற்றுவர். தமக்குத் துன்பம் நேர்ந்த போது அதற்குப் பரிகாரமாக இந்திரனை வழிபட்டுத் திருவிழா நடத்துவர். இந்திரன் மழைக்குக் கடவுள். வயலுக்கு வேண்டியது மழை, எனவே மழைக் காக வேண்டி இந்திரனை வழிபடுவர் இந்திரன் வச்சிர ஆயுதத்தை உடையவன்.

## ஈ. நெய்தல்:

நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும், நெய்தற் கடவுள் வருணன். சுறா மீன் கொம்பை நட்டு அந்நிலத்தார் வருணனை வழிபடுவர். வருணன் ஆரியர்களின் விசேட தேவர்களில் ஒருவன்.

## உ. பாலை:

பாலை என்பது நீரும் நிழலும் அற்ற இடம். பாலை நிலத் தெய்வங்கள் சூரியன், காளி, அக்கினி என்பன. பலி செலுத்துவது இவ்வழிபாட்டில் முக்கியம் பெறுகிறது. பலியின் மூலம் தெய்வத்தின் கோபம் தணிக்கப்படுகிறது என்று நம்பப்படுகிறது.

சங்க கால நூல்களில் ஒன்றாகிய தொல்காப்பியத்தில் மேற் கூறப்பட்ட நிலங்களும் தெய்வங்களும் குறிப்பிடப்படுகின்றன.

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரையுலகமும்
வேந்தன் மேய தீம்புனலுலகமும்
வருணன் மேய பெருமணலுலகமும்
முல்லை முறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

மாயோன் - விஷ்ணு சேயோன் – முருகன், வேந்தன் – இந்திரன்

தமிழ் என்பது திராவிடம் என்னும் சொல்லின் சிதைவு என்று கூறப்படுகிறது. ஆனால் திராவிட மொழிகள் பலவுண்டு அவற்றின் தமிழ் சங்ககாலப் புலவர்களினால் தெய்வீக மொழியாகப் புகழப்பட்டது. அவ்வாறே ஆரிய மொழிகளிலும் சமஸ்கிருதம் தெய்வீக மொழியாகப் புகழப்பட்டது. எனவே இவ் இரு மொழிகளும் வடமொழி என்றும் தென்மொழி என்றும் அழைக்கப்பட்டது. அப்படியே இறைவனைப் பற்றிய நம்பிக்கையும் கூட வடபாரம்பரிய நம்பிக்கை, தென்பாரம்பரிய நம்பிக்கை என்றானது. வடக்கே வைஷ்ணவமும், தெற்கே சைவமும் வளரலாயிற்று. வைஷ்ணவத்தின் முழுமுதற் கடவுள் விஷ்ணுவாகவும், சைவத்தின் முழுமுதற் !கடவுள் சிவனாகவும் வணங்கப்படுகின்றனர்.

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
செந்தமிழோ டாரியனை
தமிழ்ச் சொல்லும் வடசொல்லு நீ தானிழற் சேர
(தேவாரத்தில் ஒரு பகுதி)

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

இவ் அடிகள் மூலமாக சிவன் எல்லோருக்கும் பொதுவான தெய்வம் என்று போற்றப்படுகிறார். சோமசுந்தரக்கடவுள், முருகக் கடவுள் ஆகியோர் புலவர்களாகவும் ஆசிரியர்களாகவும் சங்ககாலத் தமிழை வளர்த்ததாகவும் பாடல்கள் உண்டு.

சிவனை நிகர் பொதியவரை முனிவனாக மகிழவிரு
செவி குளிர வினிய தமிழ் பகர்வோனே
(திருப்புகழ்)

குறு முனிக்குத் தமிழுரைக்கும் குமரர்
அகத்தியனார்க்குத் தமிழையறிவித்தும் செத்தமிழ்ப்
பரமாசாரியனாகிய ஆறுமுகக்கடவுள்
(தொல் பாயிர விருத்தி)

இங்கே முருகனுக்கு இன்னொரு பெயர் ஆறுமுகன். இவரைக் கந்த சாமியார் என்றும் கூறுவர்.

## அட்சரங்கள்:

அட்சரங்கள் என்றால் எழுத்துக்கள், தமிழ் நெடுங்கணக்கில் பஞ்சாட்சரமே சுவடிகளில் எழுதிக் கற்பிக்கப்பட்டது. அது கடவுள் என்னும் பொருள் விளங்கும் நாமம். இது சி, வா, ய, ந, ம என் பதாகும். இதைப் போன்று சடாட்சரம் (ஆறு எழுத்துக்கள்) மந்திரமாக உச்சரிக்கப்பட்டது. அந்த ஆறு அட்சரங்கள் தான் ஆறு முகமானது. ஆறு முகங்கள் ச, ர, வ, ண, ப, வ என்னும் சடாட்சரங்கள். இதனடிப்படையில் தான் சங்கீதமும் ஏழு அட்சரங்கள் (ஏழு சுரங்கள்) ச, ரி, க, ம, ப, த, நி என்றாகிறது.

பழைய தமிழ்ச் சுவடிகளில், நூல்களில் தொடக்கத்தில் ''உ'' என்னும் வடிவம் எழுதப்பட்டது. இது பிள்ளையார் சுழி என்று கருதப்படும் ஓர் எழுத்து. இதனை ''ஓம்'' என்ற பிரணவ அடையாளமாக எண்ணுவர். யானையின் துதிக்கை இதன் அடையாளமாகக் கருதப்படுகிறது.

திருவாக்கும் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.

(பதினோராம் திருமறை கபிலர்)

இன்னும் பரமசிவன், பிரமன், சதுக்கப்பூதம், பரசுராமன், பலராமன், கண்ணன், இராமன், காலன், காமன், சூரியன், சந்திரன், நகரத்தெய்வம், பத்தினிக் கடவுள், வீரன் இப்படியான தெய்வங்களைப் பற்றிய பாடல்களும் சங்க இலக்கியங்களில் உண்டு. இவ்வாறாகச் சங்க நூல்களில் கூறப்பட்ட தெய்வங்களைக் கண்டோம்.

சங்கங்களின் வளர்ச்சிக்குச் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பங்களிப்பு இருந்தது. அதிலும் முக்கியமானவர்கள் பாண்டியர்களே. சங்க காலத்தில் தமிழ் வளர்க்கப்பட்ட வேளையில் பல உட்சமயங்கள் வலுவடைந்தன, அவையாவன சைவம், வைஷ்ணவம், காணாபத்தியம், சாக்தம், கௌமாரம், சௌரம் என்பன. இவற்றுள் சைவமும் வைஷ்ணமும் முக்கியமானவை. அரசர்களின் ஆதிக்கம் சில குறிப்பிட்ட மதங்களை பலமடையச் செய்தன. மத வேறுபாடுகள் சமயப் பகுப்புகளை உருவாக்கின. இதனை சைவ நாயன்மார்கள் கண்டித்தனர். மாணிக்கவாசகரின் சமயபேதக் கண்டனச் செய்யுள் ஒன்றைக் கீழே காண்போம்.

'' தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சக்திகள்

வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல் பசுக் குழாங்கண்
பற்றியழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாக வேதியருஞ்
சரதமகவே சத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மீண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்.

நாயன்மார்களின் பக்தி வாழ்க்கையையும் அவர்களது அனுபவமும் சைவ சமயத்தை உயிர்ப்படையச் செய்தன. சைவர்கள் பின்பற்றும் ஆகமங்களாகிய பன்னிரு திருமுறை, பதிநான்கு சித்தாந்த சாத்திரங்கள் என்பன இவர்களால் எழுதப்பட்டன.

இதே காலத்தில் பிரமசூத்திரம் ஆராயப்பட்டு உபநிடதத்துக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இதனால் வேதாந்த மார்க்கம், சித்தாந்த மார்க்கம் என்ற கொள்கைகள் வெளிபடலாயின. சித்தாந்த மார்க்கம் பக்தி மார்க்கம் எனவும் அழைக்கப்பட்டது. இதன் விளைவாக இறையிணைவுக் கோட்பாடுகள் தனித் தனியாகப் புலப்படலாயின அவற்றைக் கீழே காண்போம்.

## அத்துவைதம்:

அத்துவைதக் கொள்கையைப் போதித்தவர் சங்கரர். இவர் கி. பி 8ம் நூற்றாண்டில் கேரளத்தில் பிறந்தார். பரம்பொருள் ஒன்றே பிரமம் ஒன்றே உயிருள்ளதும் உயிரற்றதுமான இயற்கை அனைத்தும் பிரமமே. பிரமம், ஆன்மா இரண்டும் வேறல்ல இவற்றை வேறாகக் காணச் செய்வது மாயை தோன்றுவது எல்லாம் மாயை பிரமம் ஒன்றே உண்மை. இதனை வேதாந்தக் கொள்கை என்பர். இதற்கு வேண்டுவது ஞானம் ஒன்றே.

| | |
|---|---|
| தத்துவம் அஸி | – நீயே அது |
| அகம் பிரம அஸி | – நானே பிரமம் |
| பிரமம் – சத் | – இருக்கிறவர் |
| ஈஸ்வரன் – சித் | – வெளிப்பட்டவர் |
| ஆனந்தம் | – முத்தி. |

## விசிட்டாத்துவைதம்:

விசிஸ்டாத்துவைதக் கொள்கையை போதித்தவர் இராமானுஜர். இவர் தமிழ் நாட்டில் செங்கற்பட்டு என்னும் இடத்தில் கி.பி 11ம் நூற்றாண்டில் பிறந்தார். இவர் பிறப்பித்த மார்க்கம் சித்தாந்த மார்க்கம் அல்லது பக்தி மார்க்கம் எனப்படும். இவர் பரம்பொருளை ஒருமைப் பொருளாகக் கொள்ளாமல், பண்புகளைப் படைத்து அடியவர்களுடன் தொடர்பு கொள்ளும் இறைவனாகக் காண்கிறார். உலகமும் அதில் உள்ளவைகளும் கடவுளின் வெளிப்பாடுகள் அல்ல. அவை தனித் தனியே விளங்கும் உண்மைப் பொருள்கள், இராமானுஜரின் கடவுள்க் கொள்கை கடவுள் நம்மோடிருக்கிறார் என்ற உறுதியையும், அனைத்துக்கும் இறைவனே காரணம் என்ற உறுதிப்பாட்டையும் அளிக்கிறது. கடவுளுக்கு மனிதன் சொந்தமானவன் என்ற நிலை உணர்த்தப்படுவதால் அதனைத் தொடர்புபடுத்துவது இன்றியமையாததாகிறது.

## துவைதம்:

துவைதக் கொள்கையைப் போதித்தவர் மத்துவர். இவர் கன்னட நாட்டில் 13ம் நூற்றாண்டில் பிறந்தவர். இவர் பிரம்மத்துக்கும், ஆன்மாவுக்கும் வேறுபாடு காட்டி இரண்டும் வெவ்வேறானவை என்கிறார். இவர் நித்தியம் - அநித்தியம் இரண்டையும் காணச் செய்து உண்மைத் தன்மையை (மெய்ப்பொருளை) அறிவது முத்தி அல்லது மோட்சம் என்கிறார், இவரும் பக்தி நெறியையே போதிக்கிறார்.

இப் பக்தி மார்க்கத்தின் அடிப்படையில் சைவம், வைஷ்ணவம் -ஆகிய மதங்கள் இறையிணைவு பற்றிய கொள்கைகள் வெவ்வேறாகத் தரப்படுவதை நாம் காணலாம்.

## சைவம்:

இம் மதம் சைவ சித்தாந்தத்தினால் விளக்கப்படுகிறது. சிவனே இதன் முழுமுதற்கடவுள், இதன் இறையிணைவுக் கோட்பாடு தலைதாழ் அல்லது தாழ்தலை எனப்படும். பதி, பசு, பாசம், என்பவற்றை சைவ சித்தாந்தம் விளக்குகிறது. பதி – இறைவன் பசு - ஆன்மா, பாசம் (மலம்) ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும்.

பதி – ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களினால் கட்டுப்படாதது. பசு – இப்மூன்று மலங்களால் கட்டுப்பட்டது. ஆன்மா இறைவனை அடைவதை இம் மூன்று வகையான கட்டுக்கள் தடுக்கின்றன. இதன் அடிப்படையில் இவ் ஆன்ம கட்டுக்கள் சகலர்,

பிரளயர், விஞ்ஞானக்கலர் என மூவகைப்படும். இக் கட்டுக்களிலிருந்து விடுபட வழிகள் சரிகை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றினைப் பின்பற்றுவதாகும். (முத்தி இறையிணைவு) இறைவனின் பாதத்தில் (தாழ்) ஆணவம் அடங்கிய பக்தனின் வணங்கிய நிலை (தலை).

சிவனைத் தந்தையாக, தாயாக, பிள்ளையாக உருவம் கொடுத்து வழிபடுதல் இறைவனின் முழு ஆளுமையைக் காட்டுவதாக அமைகிறது. இதனை விளக்கும் மெய் கண்ட தேவரின் சிவஞான போதத்தில்

''அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்''

சிவ வழிபாடு: தந்தையாக வழிபடுதலையும்,
அம்மன் வழிபாடு: தாயாக வழிபடுதலையும் (சரஸ்வதி, லக்சுமி, துர்க்கை)
பிள்ளையார் வழிபாடு: ஞானத்தை வேண்டுதலையும்,
முருக வழிபாடு: வளமான வாழ்வு வேண்டுதலையும் குறித்து நிற்கிறது
வைரவர்: காவற் தெய்வமாக வழிபடப்படுகிறார்.

## வைஷ்ணவம்:

இம் மதம் விஷ்ணுவை முழு முதற் கடவுளாகப் போற்றுகிறது. முத்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றில் காத்தற் தொழிலைச் செய்யும் கடவுளாகவும் இவர் கருதப்படுகிறார். இவர் மாற்று அவதாரம் எடுப்பதால் மாயவன் எனவும் அழைக்கப் படுவர். இவ் வழிபாட்டின் இறையிணைவு அவதாரக் கோட்பாட்டினால் விளக்கப்படுகிறது. மக்களின் துன்பம் தீர்க்க அவதாரம் எடுக்கும் இறைவனும் இவரே. விஷ்ணுவின் அவதாரங்கள் முப்பத்து மூன்று. அவற்றில் சிறப்பானது பத்து. இதில் ஒன்பது நிறைவுபட்டதாக நம்புவர். அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், ஸ்ரீராமன், பரசுராமன், கிருஸ்ணன், வாமணன், பலராமன். எதிர் பார்க்கப் படும் அவதாரம் கல்கியாகும். யாழ்ப்பாணத்தில் பழமை வாய்ந்த வைஷ்ணவக் கோவில்கள் வல்லிபுரக் கோவில், பொன்னாலை வரத ராஜப் பெருமாள் கோவில் என்பனவாகும். வைஷணவ மதத்தில் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என இரு பிரிவுகள் உண்டு.

இந்து மதத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட மதமாகக் (Systimatic Hinduism) காண்பதற்கு உதவியவர்கள் சங்கரர், மத்துவர், இராமானுஜர் என்றால் மிகையாகாது. இறையிணைவுக் கோட்பாடுகளை மையமாக வைத்து சமயங்கள் தனித்து நிற்கின்றன. அந்தந்தச்

சமயக் கோட்பாடுகள் சமயங்கள் தனித்தனியே வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கின்றன. இந்து சமய நாகரீகத்தின் தொண்மை விளக்கப் படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மேல் நாட்டவர்களே. அகழ்வாராய்ச்சியின் மூலம் பஞ்சாப்பில் உள்ள மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களின் நாகரீகத் தொன்மை புலப்படுத்தப் பட்டது இப்பணியில் சிறப்பானவர்கள் கி. பி 18ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த Maxmullar) மக்ஸ்முல்லர், (John Marshel) ஜோன் மார்ஷல் என்பவர்களாவார். இவர்களின் ஆராய்ச்சியின் பயனாக திராவிட நாகரீகமே ஆரிய நாகரீகத்திலும் தொன்மையா னதும் மேலானதும் என்று நிரூபிக்கப்பட்டது. இதன் மூலம் சிவலிங்க வணக்கம் மிகத் தொன்மை வாய்ந்தது என நிறுவப்பட்டதால் சைவத்தில் தொன்மை உறுதியாக்கப்பட்டது.

## கிறிஸ்தவ சமயச் சிந்தனைகள்

கிறிஸ்தவ மதம் அதன் தோற்றம் பற்றி பரிசுத்த வேதா கமத்தில் புதிய ஏற்பாட்டு நூல்களாக விளங்கும் நற்செய்தி நூல் களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவற்றில் காணலாம். கிறிஸ்து இயேசுவை அறிய வேண்டுமானால் பரிசுத்த வேதாகமத்தை முற்றுமாக அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் அவர் கடவுளின் வெளிப்பாட்டானவர் என்பதனை அறிந்து கொள்ள முடியும். கிறிஸ்தவ திருமறையாக விளங்கும் பரிசுத்த வேதாகமம் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரே அனைத்தையும் படைத்தவர், படைப்புக்களின் மகுடமாக மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்களுடன் அன்பின் உறவினை ஏற்படுத்தினர். அவர் மனிதனைப் பெயர் சொல்லி அழைத்தார் ஆனாலும் மனிதனோ அவருக்குக் கீழ்ப்படியாமல் அவ்வுறவிலிருந்து விடுபட்டு பாவத்தில் வீழ்ந்தான், என்ற செய்தியினை ஆதி அறிவாக வெளிப்படுத்தி, கடவுளின் வெளிப்பாடு ஒரு வரலாறு என்ற உண்மையை விளக்குகிறது. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் கீழ்ப்படியாமையினால் முறிந்து போன உறவினை கடவுள் தனது அன்பின் பெருக்கத்தால் உடன் படிக்கையை ஏற்படுத்தி சீர்படுத்த முற்படுகிறார். இவ் உடன்படிக்கை வார்த்தையாக வெளிப்பட்டது. பின் கறபனையாக எழுத்துடன் படிக்கையாக போசே மூலம் கொடுக்கப்பட்டது. இறுதியாக மாம்ச உடன்படிக்கையாக கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்டார். எனவே கிறிஸ்து மதம் போற்றி வணங்கும் கிறிஸ்து இயேசு கடவுளின் மைந்தன் பிதாவாகிய இறைவன் மனிதனாக மரியாளின் மகனாகப் பிறந்தார். எனவே இப் பரிசுத்த வேதாகமம் கிறிஸ்துவுக்கு முன் உள்ள கடவுளின் வெளிப்பாட்டை பழைய உடன்படிக்கை என்றும் கிறிஸ்துவுக்குப் பின் உள்ளவற்றை புதிய உடன்படிக்கை என்றும் குறிப்பிடப்படுகிறது.

அனைத்து உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் படைத்த இறைவனை அன்பான பிதாவாகக் கிறிஸ்தவம் காண்கிறது. மனிதன் படைப்புக்களில் மேலானவனாக நன்மை, தீமைகளை பகுத்தறிந்து வாழும் சுதந்திரம் பெற்றவன். மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் கடவுள் மனிதன் மேல் வைத்த அன்பினைக் காட்டுகிறது. கடவுள் மனிதனிடம் காட்டிய அன்பு தந்தை மைந்தனிடம் காட்டும் அன்பிலும் மேலானது. எனவே மனிதன் தேவ சாயலாகப் படைக்கப்பட்டான் என்று வேதம் குறிப்பிடுகிறது. மனிதன் நன்மை தீமையை பகுத்தறிந்து வாழத் தவறுவதினால் தேவசாயலை இழந்தான் என்று அவனது பாவ நிலையை விளக்குகிறது. ஆனால் கடவுளின் அளப்பரிய அன்பு கடவுள் மனிதனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையினால் விளங்குகிறது. கடவுள் மனிதனை உடன்படிக்கையினால் மீட்டுக்கொள்ள சித்தமானார். எனவே பரிசுத்த வேதாகமம் உடன்படிக்கையின் நூல் என்று போற்றப்படுகிறது.

பிதாவாகிய இறைவன் மனிதனாக, இறைமைந்தனாக கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார் என்று கிறிஸ்தவம் விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறது கிறிஸ்துவும் தம்மைக் குறித்துக் கூறும் போது நான் பிதாவுக்கடுத்த தேவைகளை நிறைவுபடுத்தும்படி வந்தேன் என்கிறார். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து பன்னிரண்டு வயதான போது அவர் எருசலேம் தேவாலயத்திற்கு மரியாளுடனும் யோசேப்புடனும் சென்ற போது அவர் அங்கேயே தங்கி விட்டார். அவர் தேவாலயத்தில் ஆசாரியர் மத்தியில் உரையாடிக் கொண்டிருந்தார். அவரை அவருடைய தாயார் நானும் உன் தந்தையும் உன்னை விசாரத்தோடு தேடினோம் என்றார். அதற்கு அவர் ''ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டியது என்று அறியீர்களா'' என்றார் (லூக்: 2, 49) அப்படியே அவர் தொடர்ந்தும் தனது உபதேசத்தின் போது பல வேளைகளில் தான் பிதாவின் காரியங்களை நிறைவேற்றும்படி வந்தேன் என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுப்பதற்கு முன்னதாக ஏறெடுத்த ஜெபம் அவர் உண்மையாகவே பிதாவாகிய கடவுளிடமிருந்து வந்தவர் என்பதனை உறுதிப்படுத்திற்று. ''பிதாவே வேளை வந்தது நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவற்றிற்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு மாம்சமான யாவர் மேலும் நீர் அதிகாரம் கொடுத்தபடியே உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும் படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்'' (யோவான் 17: 2)

இதனால் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு தந்தைக்கும் மைந்தனுக்கும் உள்ள தொடர்பு என்று உறுதிப்படுத்தப் படுகிறது. இந்த உறவினையே கிறிஸ்தவம் கடவுள் ஒருவரே பிதா என்றும் (The Father) கிறிஸ்து ஒருவரே அவரின் மைந்தன் (The Son) என்றும் விளக்குகிறது. பிதாவாகிய கடவுள் அனைத்து மனுக்குலத் தையும் மைந்தர்களாக ஏற்றுக் கொள்ள சித்தங் கொண்டார். படைப்புக்களின் மகுடமாக மனிதனைப் படைத்த நோக்கம் அதுவே ஆனால் மனிதனோ தான் பெற்றுக் கொண்ட பகுத்தறிவையும் சுதந்திரத்தையும் பயன்படுத்தி நன்மையானவைகளைத் தெரிந்து கொள்ளத் தவறினான். பரிசுத்த வேதாகமம் தரும் அடிப்படைப் போதனை நன்மையானவைகளைத் தெரிந்து கடவுளுடன் சார்ந்து வாழ்ந்தால் ஆசீர்வாதம் என்றும், தீமையைத் தெரிந்து கடவுளை விட்டுப் பிரிந்து வாழ்ந்தால் சாபம் என்பதாம். அதேவேளையில் நன்மையையும், தீமையையும் நடப்பித்து வாழ்ந்தால் அது இராட்சத வாழ்க்கை என்றும் விளக்கப்படுகிறது. ஆதியாகமம் (6:1–6)

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து மனிதம் என்னும் அணி கலங்களால் நிரப்பப்பட்டு இவ்வுலகத்தில் அவரே மனிதனாக வாழ்ந் தார். இன்னொரு விதத்தில் அவரை நோக்குவோமானால் உடன் படிக்கையின் பொருளாக மோசே மூலம் கொடுக்கப்பட்ட பத்து கற்பனைகளையும் தனது மனித வாழ்வில் ஜீவனாக்கினார். இதனால் அவரை வார்த்தையானவர் மாம்சமானார் என்று யோவான் தனது சுவிசேஷத்தில் கூறுகிறார். ஆதியில் வார்த்தையினால் தம்மை வெளிப்படுத்தி படைப்பின் காரியங்களை நடப்பித்து பின் மனிதன் பாவத்தில் வீழ்ந்த போது மனிதனுடன் உடன்படிக்கை பண்ணின பிதாவானவர் கிறிஸ்து இயேசுவின் மாம்சத்தில் மனித ஜீவனானார். இதனால் அவரே கடவுளின் மைந்தன். மைந்தனாக வந்த அவரது நோக்கம் அனைத்து மனுக்குலத்தாரையும் இறைமைந்தராக்குவதே யாகும். அனைவரையும் மைந்தர்களாகக் காண்பதற்கு அவர் சரீர உடன்படிக்கையாக நம்மிடம் வந்தார். அதன் பொருளை அவர் சீஷர்களுடன் நடப்பித்த இராவிருந்து மூலம் விளக்குகின்றார்.

அவர் அந்த இரவு விருந்தின் போது ஒரு அப்பத்தை எடுத்து சீஷர்களுக்குப் பகிர்ந்தளித்துக் கொடுத்து அவர் கூறியது நீங்கள் இப்போது என்னுடைய சரீரத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறீர்கள் என்றார். அப்படியே அவர் ஒரு பாத்திரத்தில் உள்ள திராட்சை ரசத்தை அவர்களுக்குப் பருகக் கொடுத்து அவர் கூறியது இப்போது எனது இரத்தத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறீர்கள் என்றார். இதனால் நீங்கள் எனது உடலும் இரத்தமுமாக என்னுடன் இணைக்கப்படு கிறீர்கள் என்றார். இதனை அவர் பரிசுத்த உடன்படிக்கையின்

கிரியையாக ஏற்படுத்தினார் இவ்விதமாக அனைத்து மனுக்குலத்தாரும் இந்த உடன்படிக்கையின் மூலம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமும் ஒரே இரத்தமுமாக இணைக்கப்பட வேண்டும் என்பதே அதன் நோக்கம் இந்த உடன்படிக்கையானது தான் திரும்ப வருமளவும் நடப்பிக்கப்பட வேண்டும் என்று வாக்குறுதியளித்தார். இந்த வார்த்தையின் மூலம் அவர் திரும்பவும் வருவார் என்ற நம்பிக்கை கிறிஸ்தவத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது.

இங்கு உடன்படிக்கை மூலம் மக்களுடன் இணைக்கப்படுவதை விளங்கிக் கொள்ளும்படி அவர் ஒரு உவமையை போதனையின் போது கூறியிருக்கிறார் (யோவான் 15: 1 – 5) பிதா தோட்டக்காரர் நான் திராட்ஷை செடி நீங்கள் எல்லாம் எனது கிளைகள் என்றார். திராட்ஷைச் செடியாகிய தன்னில் அனைத்து மனுக்குலமும் ஒன்றுபட்டு ஒரு கொடியின் கிளைகளாக விளங்க வேண்டும் என்கிறார். இதனால் குமாரனுக்குரிய கனியினை அனைத்து மனுக்குலமும் கிறிஸ்துவின் வழியால் கொடுக்கிறவர்களாவார்கள். இதனால் கிறிஸ்துவின் மைந்தனுக்குரிய தன்மையை அனைத்து மனுக்குலமும் பெற முடியும்.

இந்த ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து நடப்பித்த அன்பிலிருந்து இஸ்ரவேல் மக்களினால் காலம் காலமாக நடப்பிக்கப்பட்ட பஸ்காப்பலிக்கு ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்தது. இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று அற்புதமாக விடுதலையாக்கப்பட்ட அனுபவத்தை நினைவு கூர்ந்து புளிப்பில்லாத அப்பத்தைப் புசித்து இளங்கன்றுக்குட்டியை பஸ்காப்பலியாக செலுத்தி பஸ்காப்பலியைக் கொண்டாடினர். அப்பலி கொண்டாடப்படும் நாட்களில் அநேகமாக எல்லா இஸ்ரவேல் மக்களும் எருசலேம் தேவாலயத்தில் ஒன்று கூடுவார்கள். தங்கள் பாவங்களை பலிகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் நீக்கப்பட்டது என நம்பினார்கள். அந்தப் பலியின் போது மனிதனின் பாவத்திற்கு மனிதனே பலியாக ஒப்புக் கொடுக்க முடியாதிருந்தது. ஏனெனில் சகல மனிதர்களும் பாவத்துக்குட்பட்டவராகவே காணப்பட்டனர். எனவே பாவமறியாத பொருளே பலிப் பொருளாக இருக்க வேண்டும். இதனால்த் தான் பலிச்சடங்குகள் நிறைவேற்றப்பட பாவமற்ற பழுதற்ற பலிப் பொருள்களாக மிருகங்களையும் பறவைகளையும் தெரிந்து கொண்டனர். அத்துடன் பலிப்பொருளின் இரத்தம் சிந்தப்பட வேண்டும். எனவேதான் மனிதனின் பாவத்திற்காக பாவமற்ற பழுதற்ற பலிப் பொருளாக ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தன்னையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். யோவான் தனது சுவிசேஷத்தில் இயேசுக் கிறிஸ்து தன்னையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். யோவான்

தனது சுவிசேஷத்தில் இயேசுக் கிறிஸ்துவைக் குறித்து குறிப்பிடும் போது தேவாட்டுக்குட்டி என்கிறார். கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தினார் அத்துடன் கடவுளையும் மனிதனையும் இணைக்கும் பிரதான ஆசாரியராகவும் காணப்பட்டார். இந்த இவரது ஜீவபலியின் விளக்கம் அவர் அன்று பெரிய வியாழனன்று நடப்பித்த அன்பின் விருந்தில் அர்த்தம் பெறுகிறது. இந்தத் திருப்பலி மூலம் மேலும் உயிர்ப்பலிகள் செலுத்த வேண்டியதில்லை என்பதனை உணர்த்தினார்

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் ஒரு புது யுகத்தையே காணச் செய்தது. அதனால்தான் வரலாற்றை வரையறுத்தவர்கள் கிறிஸ்துவுக்கு முன் உள்ள காலம் என்றும் கிறிஸ்துவுக்குப் பின் உள்ள காலம் என்றும் காலத்தை இரண்டாக வகுத்தனர். கிறிஸ்துவின் வருகையால் ஒரு புதிய உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என்பது வரலாற்று உண்மை. படைப்பாளர் ஒருவர் தான் படைத்தவற்றை புனரமைக்க முடியும். அப்படியே ஆதியிலே வார்த்தையினால் உலகமனைத்தையும் படைத்த பிதாவாகிய கடவுள் தன் படைப்புக்களை சீர்குலைத்த மனுக்குலத்தை மீட்டுவிடுவிக்க உடன்படிக்கைப் பொருளாக கன்னிமரியின் மைந்தனாக மனிதனாக இவ்வுலகத்தில் அவதரித்தார். மரணத்துடன் முடிந்து விடும் என்று நினைத்த மனித வாழ்வு மரணத்தின் பின் ஒரு புதிய வாழ்வை சந்திக்கிறது என்ற உண்மையை அவர் தன் போதனையாலும் தனது உயிர்த்தெழுதல் மூலமும் விளங்கச் செய்தார். இந்த நித்திய வாழ்வு எத்தகையது என்பதனை போதனையினால் எடுத்துரைத்தார். ''என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்'' (யோவான் 5: 24) நமது வாழ்வு மரணத்துடன் முடிவடைந்து விடுகிறது என்றால் அது அர்த்தமற்றது அத்துடன் அவ்வாழ்வு அறம் சார்ந்த வாழ்வாக இருக்க வேண்டியதில்லை என்று கருதப்படலாம் ஆனால் இயேசுக் கிறிஸ்து மனித வாழ்க்கை பரிசுத்தமான அர்த்தமுள்ள வாழ்வாக இருக்க வேண்டும். என்பதனை தனது போதனையாலும் கிரியைகளினாலும் தனது மனித வாழ்வில் விளங்கச் செய்தார். மனிதன் உருவத்தில் மாத்திரம் மனிதனாகவல்ல மனிதம் என்னும் அன்பு சந்தோஷம், சமாதானம், நீதி, இரக்கம் ஆகிய அணிகலங்களால் சூடப்பட வேண்டும் அர்த்தமுள்ள மனித வாழ்வை ஏற்ற ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து அணைத்து மனிதம் என்னும் அணிகலங்களால் அலங்கரிக்கப்பட்டவராக வாழ்ந்தார். அதே வாழ்க்கை முறைகளையே தனது சீடர்களுக்கும் அடியவர்களுக்கும் விளங்கச் செய்தார்.

பரிசுத்த பவுல் மனித வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதனை விளக்க கோதுமை மணியின் உவமையைக் கூறினார். "நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே" (1 கொரி 15: 36) மனுக்குலம் விதைக்கப்பட்ட கோதுமை மணிக்கு ஒப்பானவர்கள். அந்த மணியானது முழுமையான வளர்ச்சியுடைய தாக இருக்க வேண்டும் அப்போது தான் அது முளைத்துப் பயிராகும். விதைக்கப்படும் கோதுமை மணி தனது மேனியை அழித்தே புதிய பயிரை முளைப்பிக்கிறது. ஆனால் முழுமையடையாத கோதுமை மணி பதராகும். அது விதைத்தாலும் முளைக்காது. எனவே ஒவ்வொரு மனிதனும் முழுமையான மேனியை உடைய கோதுமை மணியைப் போல் பூரண அணிகலங்களையுடைய மனிதனாக வாழ வேண்டும். அப்போது தான் அவர்கள் தன் மேனியை அழித்து புதுப் பயிரை உண்டாக்கிய கோதுமை மணி போல நித்திய வாழ்வு பெற்ற மனுக்குலமாக வாழ்வர். ஒருவன் தன்னைப் பதருக்கு ஒப்பானவனாகக் காண்பானானால் அவன் கிறிஸ்துவை ஏற்று வாழ்வதன் மூலம் முழுமையான மேனியை உடைய கோதுமை மணிபோல நித்திய வாழ்வினைச் சுதந்தரித்துக் கொள்ளுவான். இது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவினால்ப் பெறப்படும் இரட்சிப்பாகும் தங்கள் வாழ்வை அற்பமாக எண்ணி வழி விலகிப் போனவர்களை இரட்சிப்பின் வழிக்குள் அழைக்கும் ஆண்டவராக இருக்கிறார் எனவே வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார். நாம் ஆண்டவருடைய சந்நிதானத்திலிருந்து நம்மை நாமே சோதித்து பார்க்கும் போது நமது தவறுகள் நமக்கு நன்றாகத் தெரியும். பரிசுத்த பவுல் பரிசுத்தராகக் கருதப்பட்ட போதிலும் அவர் தன்னைக் குறித்துச் சொல்லும் போது தான் நிற்பந்தமான பாவி என்பார். மேலும் அவர் கூறுவது நன்மையானது இன்னதென்று எனக்குத் தெரியும் ஆனால் அதனை என்னால் செய்ய முடிவதில்லை அதே வேளையில் தீமையானது இன்னது என்று எனக்குத் தெரியும் அதனை செய்யத் தூண்டப்படுகிறேன் என்றார். பரிசுத்த பவுல் கூறிய இவ் வார்த்தை எவ்வளவு உண்மை என்பது எங்களால் உணர முடிகிறது. இந்த உலகத்தில் மனிதனுடைய அடிப்படை கிரியை என்ன என்று திருமறை பல இடங்களில் கூறுகிறது. "மகிழ்ச்சியாக இருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல் வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லை" என்று பிரசங்கி 3: 12ல் கூறுகிறார். தீர்க்கதரிசி மீகா மனிதனைப் பற்றி குறிப்பிடுகையில் "மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ் செய்து இரக்கத்தை சிநேகித்து உன்தேவனுக்கு

முன்பாக மனத் தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே எதனத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (மீகா 6:8) மேற்படி வார்த்தைகளை நினைத்துப் பார்க்கும் போது நாம் குறைவுபட்டவர்கள் என்பதனை உணர்த்துகிறது. இந்த உணர்வுகளினால் நம்மை விடுவித்து நல்ல கிரியைகளை தெரிந்து கொள்ள முற்படும்போது மீட்பின் அனுபவத்துக்குள்ளாவோர். இத்தகைய மீட்பைப் பற்றிய உபதேசம் வேறு எந்த மதத்திலும் காணப்படாத ஒன்றாகும். பாவிகள் என்றும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், ஊனர்களாகவும், பெலவீனர்களாகவும் உள்ள மக்களைக் குணப்படுத்துவதன் மூலமும் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து மீட்பின் பணியினை நடப்பித்துக் காட்டினார். அவர் தம்பணி பற்றி போதிக்கும் போது "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவனுக்கு வைத்தியன் வேண்டியதில்லை." நீதிமான்களையல்ல பாவிகளையே மனந் திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். (மாற்கு 2:17)

மீட்பானது பல தொடர் அனுபவங்களைக் கடந்து சந்திக்கும் அனுபவமாகும். முதலில் நமது தவறுகள் உணரப்பட வேண்டும். (Conviction) பின்னர் அவைகள் மன்னிப்பின் முன்னடையாளமாக அறிக்கை பண்ணப்பட வேண்டும். (Confession) ஒப்புரவாக்கப்பட வேண்டும் (Reconcilation) இந்த ஒப்புரவாக்குதலின் போது ஏற்படும் மகிழ்ச்சியான அனுபவமே மீட்பின் (Conversion) அனுபவமாகும்.

இஸ்ரவேலின் தந்தை என்று அழைக்கப்படும் யாக்கோபு தன் உடன் சகோதரன் ஏசாவை ஏமாற்றி தந்தையின் ஆசீர்வாதத்தை பெற்று விடுகிறான். இதனால் ஏசாவுக்குப் பயந்து தன் மாமனாரான லாபானுடன் வாழ்கிறான். அங்கே இருபது வருடம் தன் சகோதரனைப் பிரிந்து வாழ்ந்தான். அவன் சகோதரனை விட்டுப் பிரிந்து வாழ்வது தவறு என்று உணர்ந்த பின் சகோதரனுடன் ஒப்புரவாகி வாழத் துடித்தான். தன் தவற்றிற்கு ஈடாக ஏசாவுக்கு காணிக்கைப் பொருட்களைக் கொடுத்து ஒப்புரவு செய்து கொண்டான். இந்த நன்மையான செயலை நடப்பித்ததன் மூலம் இஸ்ரவேல் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். தன் இழந்து போன உறவைப் புதுப்பித்துக் கொண்டான்.

ஒரு நெசவாளன் துணி நெசவு செய்யும்போது நேராகவும் குறுக்காகவும் ஓடும் நூலை சீர்படுத்த வேண்டும். அவைகள் துண்டிக்கப்படும் போது அந்தந்த இடங்களில் தொடுக்கப்படவேண்டும். அப்போது தான நெய்யப்பட்ட துணி சீரானதாக இருக்கும். நூல் துண்டிக்கப்படும் போது அந்தந்த இடங்களில் தொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் நெய்யப்பட்ட துணி சீரானதாக இருக்கும். நூல் துண்டிக்கப்படும் போது நெசவாளன் கவலையினமாக இருந்து

விட்டால் நெய்யப்பட்ட துணி சீர்கெட்டதாக இருக்கும். அப்படியே தமக்குள்ளும் உறவு முறிவுகள் ஏற்பட்டால் உடனே ஒப்புரவாகுதலினால் இணைத்து விட வேண்டும். இப்படி ஒப்புரவகுதலினால் இணைக்கப்படாத முறிவுகள் வளர்ந்து ஒரு சாபமான நிலையை உண்டாக்கும்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து போதித்த உவமைகளில் கடவுளின் அன்பினை விளக்கும் உவமைகளாகக் காணாமல் போனவற்றைத் தேடிக் கண்டு பிடிக்கும் உவமைகளில் காணலாம். இவற்றினை லூக்கா சுவிசேஷம் 15ம் அதிகாரத்தில் தொடராகக் காணலாம். காணாமல் போனவைகள் என்னும் போது கடவுளின் உறவிலிருந்து விடுபட்டுள்ளவைகளைக் குறிக்கிறது. எந்த ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு குமாரனை ஈந்து கடவுள் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். பிதாவாகிய கடவுளின் அன்பினை திருந்திய மைந்தனின் உவமை நன்கு விளக்குகிறது. இத் திருந்திய மைந்தனின் உவமையில் இளைய மைந்தன் தன் பாகத்தைத் தந்தையிடம் பிரித்துக் கொள்வதன் மூலம் தந்தையை விட்டுப் பிரிந்தவனாகிறான். அதேவேளை மூத்த மைந்தன் தந்தையோடு வாழ்கிறான். தனது பாகத்தைப் பிரித்து சென்ற இளைய மைந்தன் தனது பாகமாகிய சொத்தில் நம்பிக்கையும் அன்பும் வைக்க முற பட்டதோடு தன் தந்தையுடன் வாழும் சுதந்திரத்தை இழக்க நேரிடுகிறது. தன் சொத்துக்கு தானே உரித்தாளி என்பது இளைய மைந்தனின் சிந்தனை, அதனைத் தன் எண்ணப்படி தன் தோழர்களுடன் அனுபவித்தான். காலப் போக்கில் அவனது சொத்து விரயமாகி ஏதும அற்றவனாகி வாழ்வதற்கு உணவு கிடைக்க முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டான். அப்போது தான் தந்தையுடன் வாழும் சுதந்திரத்தை விட உலகப் பிரகாரமான சொத்துச் சுதந்திரம் கேடானது என்று உணர்ந்தான். இதே போல் ஒவ்வொரு மனிதனும் உலக செல்வமும், பதவியும், மதிப்பும் நமது சுதந்திரம் என்று நினைக்கின்றனர். அது காலப் போக்கில் பலனற்றது என்று உணரும காலம் வரும். இளைய மைந்தனும் அவ்வாறு உணரும் நிலை வந்தது. தன் தவற்றை உணர்ந்தான். தன் பாகத்தை தான் தந்தையிடம் பிரித்து எடுத்ததனால் தந்தையுடனான உறவும் முறிந்து விட்டது என்று எண்ணி கலங்கினான் தந்தையைத் தான் தந்தையாக உறவு கொள்ள முடியாவிட்டாலும் அவரை தனது எஜமானாக காண விரும்பினான். இந்த தனது மனமாற்றத்தை தனது முடிவாக்கிக் கொண்டு தந்தையிடம் திரும்பினான்.

ஆனால் தந்தையோ தன் இளைய மைந்தன் தன்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டானே என்று கலங்கின உள்ளத்துடன்

காணப்பட்டார். தந்தையிடம் சென்ற இளைய மைந்தன் மன்னிப் புக்கோரி தந்தையிடம நான் உமது மைந்தன் என்று கூறிக் கொள்ள தகுதியற்றவன் என்னை உமது வேலைக்காரரில் ஒருவனாக ஏற்றுக் கொண்டருளும் என்று தந்தையின் பாதத்தில் வீழ்ந்தான். ஆனால் தந்தையோ அவனைத் தூக்கி நிறுத்தி மகனே நீ மரித்துப் போனாய் என்று எண்ணினேன் ஆனால் நீ மரிக்கவில்லை இப்போது தான் நீ என்னுடைய மகன் என்று கூறி அவனை அன்புடன் தழுவி அவனுக்குரிய ஆடைகளையும் மோதிரத்தையும் அணிவித்து அவன் திரும்பி வந்ததன் நிமித்தம் மனம் மகிழ்ந்து விருந்து பண்ணினான். தந்தையாகிய நமது ஆண்டவர் எங்களை ஒரு போதும் கைவிட மாட்டார் நாம் மனந் திரும்பி எங்கள் தவறுகளை உணர்ந்து அறிக்கை பண்ணும் போது எங்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் ஆண்டவராக இருக்கிறார் மகனே உன் நெஞ்சை எனக்கு தாராயோ மோட்ச வாழ்வு தந்து பாராயோ என்று அழைக்கும் ஆண்டவராக இருக்கிறார் இது அவரது தூய அன்பின் சிந்தையை வெளிப்படுத்து கிறது.

அந்த உவமையில் மூத்த குமாரன் தனது சகோதரன் மனந் திரும்பி வந்தது குறித்து மனம் மகிழவில்லை. அவனுக்காக தந்தை ஏற்படுத்தின விருந்தின் நிமித்தம் அதிர்ப்தி அடைந்து தன் தந்தையை விட்டுப் பிரிந்தான். அதனால் அவன் காலம் காலமாக தந்தையிடம் வாழ்ந்து வந்த சுதந்திரத்தையும் அவன் இழந்து விடுகிறான். இதன் மூலம் கடவுளிடம் வாழ்ந்தவர்களாக இருக்கும் மாய பக்தர்களின் மன நிலையும் வெளிப்படுத்தப்படுகிறது. உடன் பிறந்தவருடன் அன்பு கூராமல் கடவுளின் அன்பர் என்று கூறுவதில் அர்த்தமில்லை என்பது இதனால் விளங்குகிறது. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மோசே மூலமாகக் கற்பித்த பத்துக் கற்பனைகளை இரண்டு கற்பனைக்குள் அடக்கிப் போதித்தார். அவர் கற்பித்ததாவது ''நம்முடைய கட வுளாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக'' இதற்கு ஒப்பான இரண்டாம் கற்பனை ''உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக'' என்பதே பிறனிடத்தில் அன்பு கூர மனதில்லாதவன் ஒரு போதும் கடவுளிடத் தில் அன்பு கூர முடியாது.

இறையரசு பற்றிய செய்தியினை கிறிஸ்தவத்தில் காணலாம். இதனைப் பரலோக இராஜ்ஜியம் என்றும் கூறுவர். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து போதித்த உவமைகள் அனைத்தும் பரலோக இராஜ்ஜியம் பற்றியதேயாகும். இந்த இறையரசு அல்லது பரலோக

இராஜ்ஜியம் என்பது இன்னும் ஒரு உலகமாகக் குறிப்பிடுகின்றதா? என்று நினைக்கத் தூண்டும். அது பற்றி கிறிஸ்தவம் கூறும் செய்தியினை தொடர்ந்து காண்போம். உவமைகள் மூலம் தரப்பட்ட போதனைகளில் இறையரசு என்பது இந்த உலகத்திலேயே உண்டு என்றும் அதன் செயல்பாடுகள் இவ் உலகத்திலேயே காணப்பட வேண்டும் என்று விளக்கப்படுகிறது. இதனால் இவ் உலகத்தில் இரு வகையான அரசுகள் உண்டு என்பதனை விளங்கிக் கொள்ள முடியும். நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் நாம் இந்த உலகத்திற்கு உரியவர்கள் அல்ல. எமது உலக வாழ்க்கை கடலில் மிதந்து செல்லும் கப்பலைப் போன்றது. உலகமாகிய கடலில் எமது வாழ்வு ஒரு இலக்கை நோக்கி மிதந்து செல்லும் கப்பலைப் போன்றது. வாழ்க்கையில் கஸ்டங்கள் துன்பங்கள் கடலில் மோதும் அலைகளைப் போல் எதிர்த்து நின்றாலும் விசுவாசம் என்னும் சுக்கானுடன் எதிர்த்து வரும் பாடுகளை துன்பங்களை சுமந்து நித்திய வாழ்வாகிய இலக்கை நோக்கி செல்ல வேண்டும். இயேசு சிஷத்துவத்தைப் பற்றிக் கூறும் போது ''ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்'' (மாற் 8:34) என்றார். கிறிஸ்துவைப் பின்பற்றாதவனுடைய வாழ்வு உலக இச்சைக்குள் இலக்கின்றி அமிழ்ந்து விடும் கப்பலைப் போலாகும்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து பிலாத்துவின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டபோது பிலாத்து அவரிடம் நீர் யூதருக்கு இராஜாவா? என்று கேட்டான். அதற்கு கிறிஸ்து இயேசு ஆம் நீர் சொல்லுகிறபடிதான் என்று பதிலளித்தார். மேலும் அவர் ''என் இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல'' என்றார். யோவா 18:36) இவ்வுலகு என்று கூறப்படும் அரசு பல்வேறு இராஜ்ஜியங்களில் வெவ்வேறு அரசர்களால் ஆளப்படும் நாம் காணும் அரசுகளாகும். பதவி, அந்தஸ்து, அடக்குமுறை, யுத்தங்கள் அங்கே காணப்படும் இறையரசு என்பது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவினால் உண்டானது. சத்தியமாகிய நித்திய வாழ்வுக்காக மனந்திரும்பி உலகச் செல்வத்தை விட்டு கிறிஸ்துவின் சீஷத்துவத்தை ஏற்று வாழ்வதாகும். இங்கே பதவி, அந்தஸ்து, அதிகாரம், அடக்குமுறை, யுத்தம் என்பது கிடையாது. இறையரசை ஸ்தாபித்த கிறிஸ்து தனது போதனையில் ''ஊழியம் கொள்ள அல்ல ஊழியம் செய்யவே வந்தேன் என்றார்'' ஊழியனின் ஊழியனாகப் பணி செய்வதன் மூலமாகவே இங்கே உயர்ந்த அந்தஸ்தைப் பெற முடியும். கடைசி இரவுணவை நடப்பித்த போது இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவினார். மேலும் அவர்

கூறியது " ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள் " என்றார் (யோவா 13:4)

தமது சீஷர்களின் பணி மக்களின் தாழ்விடங்கள் வரை இறங்கிச் செய்ய வேண்டிய பணி என்பதனை இதனால் விளக்கு கிறார். இயேசுக்கிறிஸ்து கலிலேயாக் கடலோரத்தில் சுற்றித் திரிந்து ஆற்றிய போதிக்கும் பணி, குணமாக்கும் பணி, தீர்க்கதரிசனப் பணி, திருச்சபைப்பணியாக பேதுருவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டது. இச் சபை ஸ்தாபிக்கப்பட்ட நாள் ஐம்பதாம் நாள் என்று அர்த்தங் கொள்ளும் பெந்தேகோஸ்தே நாளாகும். இப் பணியானது தொடர்ந் தும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் திருச்சபை என்ற பெயரில் நடப்பிக்கப்பட்டு வருகிறது.

முதல் மனிதன் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் உண்டான பாவம் கிறிஸ்துவினால் சிலுவை பரியந்தம் நடப்பித்த கீழ்ப்படிவி னால் இரட்சிப்பின் வழி நடத்தலை தந்தது. இதனால் எந்த ஒரு வனும் இரட்சிப்பினை கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளும் விசுவாசத் தினால் பெற்று விட முடியும்.

கொலைக்கருவியாக உரோம அரசினால் பயன்படுத்தப்பட்ட சிலுவை மரத்தில் குற்றமற்ற கிறிஸ்துவின் இரத்தம் சிந்தியதால் சிலுவை புனித சின்னமானது. எனவே இது கிறிஸ்தவத்தின் அடை யாள சின்னம். இந்த சிலுவை மரத்தில் அவர் தொங்கிய போது ஏழு திருவார்த்தைகளை தான் மரிக்க முன்னதாக மொழிந்தார். அதின் மகுடமாக மன்னிப்பின் வார்த்தையை மொழிந்தார். இத்தனை வாதைகளையும் நடப்பித்த கொடியவர்களை " பிதாவே இவர்களை மன்னியும் இவர்கள் செய்வது இன்னது என்று அறியாதிருக்கிறார்கள்' என்று கூறி அவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் வேண்டினார். எனவே இவர் அனைத்துப்பாவங்களையும் மன்னிக்கவந்த மாமன்னன். இயேசுக் கிறிஸ்து சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகளையும் மன்னிக்க வந்த மாமன்னன் என்னும் தலைப்பில் காண்போம்.

# முதலாம் வார்த்தை

"பிதாவே இவர்களை மன்னியும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்"

சிலுவையில் தொங்கிய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து ஏழு வார்த்தைகளை மரிக்கு முன்னர் மொழிந்தார் என்பதை சுவிசேஷங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. முதலில் அவரது வாயிலிருந்து வெளிப்பட்டது மன்னிப்பின் குரல். இந்த மன்னிப்பின் குரலை நமது சிந்தையில் இருத்தி தியானிப்போம். முதலில் மலைப் பொழிவினூடாக அவர் தந்த மன்னிப்பின் போதனையை காண்போம். (மத் 5:44) "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்பதே அவருடைய போதனை. அவர் வெறும போதனைகளை தந்தவரல்ல அதனை சாதித்தும் காட்டினார். பகைக்கிறவர்களுக்காக, சபிக்கிறவர்களுக்காக நிந்தனைக்குட்படுத்தித் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஏறெடுத்த ஜெபமே இந்த மன்னிப்பின் குரல் இந்த விதமாக தங்கள் பகைமையை வெளிப்படுத்திய அம்மக்களை மன்னிக்கும் படி பிதாவிடம் வேண்டினார். அதுவுமல்லாமல் அவர் இவர்களைப்பற்றிக் கூறும் போது அவர்களை அஞ்ஞானிகள் என்று குறிப்பிடுகின்றார்.

அஞ்ஞானத்தின் கிரியைகளே நமது தவறுகள். அத்தவறுகள் மன்னிக்சப்படுவதால் முற்றுப்பெறுகிறது. தவறுகளுக்கு தண்டனை என்பது உலகம் காணும் நீதி.

ஒவ்வொரு தீவினைகளுக்கும் அத்தீவினைகளின் பலன் உண்டு என்பது மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. எனவே தங்கள் தீவினைகளின் தண்டனைக்குத் தப்புவதற்காக பிராயச்சித்த கிரியைகளாக புண்ணிய காரியங்கள் பலிகள் என்பவற்றை நடப்பிக்கத் தூண்டப் படுகின்றனர். நமது சூழலில வாழும் புறமத மக்கள் புண்ணிய காரியங்களுக்காக பல கிரியைகளை நடப்பிப்பதை காணலாம். அதன் நோக்கம் தங்கள் தீவினையின் பலாபலனாகிய தண்டனையில் இருந்து விடுபடுவதேயாகும். ஒரு மனிதன் தனக்கு வரும் கஸ்ரங்களை அனுபவிக்கும் போது அது தனக்கு கடவுளால் கிடைத்த தண்டனை அல்லது அவரது சோதனை என்று கருதுகிறான். இதனால் கடவுள் தண்டனை வழங்குபவர் அல்லது சோதிப்பவர் என்றாகிறது. கடவுளோ அன்புக்கு விரோதமான தண்டனையையோ அல்லது சோதனையையோ தருபவர் அல்ல. கஸ்ரங்களும் பாடுகளும்

தீவினைக்கு மாத்திரமல்ல நல்வினைக்கும் உண்டு. ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து பட்ட கஷ்ரங்களும், பாடுகளும் அவரது நல்வினையினால் ஏற்பட்டது. எனவே நாம் கஸ்ரங்களையும், பாடுகளையும் அனுபவிக்கும் போது இவைகள் எதனால் எமக்கு உண்டானது என்பதையே நினைத்துப் பார்க்க வேண்டும். மனிதன் கஸ்ரங்கள் பாடுகள் அற்ற வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென கருதுகின்றான். கருதியே கடவுளை நாடுகின்றான். கஸ்ரங்கள் பாடுகள் அற்ற வேளையில் கடவுளை மறந்து வாழ்வதுவும் கஸ்ரங்கள் பாடுகள் தனக்கு வரும் போது கடவுள் ஒருவர் இருக்கிறாரா? என்று சந்தேகம் கொள்வது மனித சுபாவமாகிவிட்டது.

ஒவ்வொரு மனிதனும் தனது செயல்கள் கடவுள் சித்தப்படியா அல்லது தனது சுய சித்தப்படியா நடக்கின்றன என்று சிந்திக்க வேண்டும். சுய சித்தக்கிரியைகளையும் நாம் பிரித்துப் புரிந்து கொள்ளலாம். சுய சித்தத்தின் கிரியைகள் நம்மை மரணம் வரை மாத்திரம் வழிநடத்தவல்லது. ஆனால் தெய்வ சித்தத்திற்கு உட்பட்டு வாழ்பவர். மரணத்தை வென்று புது வாழ்வு பெறுபவர். இந்தப் புது வாழ்வு வாழ நம்மை எவுவது ஒரு ஞானம்.

இந்த ஞானமே கடவுளை அறியும் ஞானமாகும். இந்த ஞானம் மன்னிப்பினால் நாம் பெறும் ஆதாயமாகும். மன்னிப்பு என்பது நாம் மனம் திரும்பி கடவுளுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புவிப்பதால் கடவுளால் கிருபையாகக் கொடுக்கப்பட்ட ஒரு கொடையாகும். இந்த அருட் கொடையை அஞ்ஞானிகளாக இருக்கும் அதாவது அவரை (உபபாதிப்புக்கு) உட்படுத்தியோர் பெற வேண்டும் என பிதாவை வேண்டினார். எனவே அனைவருமே பிதாவை அறிய வேண்டும் என்பது அவருடைய நீதியாக இருந்தது.

ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் பணியை நாம் நோக்குவோமானால் அவர் மக்கள் மேல் வைத்த மகத்தான அன்பைத்தான் காணமுடியும். அவர் தன்னைப் பகைத்தவர் மேல் காட்டிய அன்பின் ஆழத்தை மன்னிப்பின் மூலம் வெளிப்படுத்தினார். மன்னித்தல், மன்னிக்கப்படுதல் என்பது தண்டனையை விட கடினமான தொன்றாகும். ஆனால் நாம் மன்னிப்பின் செயல் மிகவும் இலகுவானது என்று கருதுகின்றோம். இதை புரிந்துகொள்ள (நடந்த) ஒரு உதாரணத்தைத் தருகின்றேன். ஒரு நாள் வகுப்பில் ஒரு மாணவனை இன்னொரு மாணவன் அடித்விட்டான். இதனை ஒரு ஆசிரியர் பார்த்துவிட்டார். அவர் அடித்த மாணவனுக்குத் தண்டனை வழங்க எண்ணினார் பிரம்பைக் கையில் எடுத்தார். இதனை பார்த்த அந்த மாணவன் ஆசிரியரிடம் தானாக முன் வந்து அத்தண்டனையில் இருந்து தப்புவதற்காக ஆசிரியரைப்பார்த்து நான் இனிமேல் யாரை

யும் அடிக்கமாட்டேன். என்னைத் தண்டிக்க வேண்டாம் என்று கூறியழுதான். இதனைப் பார்த்த ஆசிரியர் அவனை பார்த்து நான் உனக்கு அடிக்கவில்லை என்று கூறிப் பின் அவனால் அடிக்கப்பட்ட மாணவனை அழைத்தார். அழைத்த அந்த மாணவனிடம் அவனை அடித்த மாணவனைப் பார்த்து நண்பனே இனிமேல் உன்னை அடிக்க மாட்டேன். தயவுசெய்து என்னை மன்னித்துவிடு என்று கூறும்படி கேட்டார். நடந்தது என்ன தெரியுமா? இருவரும் மன்னிக்க மன்னிக்கப்படத் தயங்கினார். இந்த விதமான தயக்கம் அந்த மாணவர்களிடம் மாத்திரமல்ல நம்மிழும் காணப்படுகிறது. தவறை (குற்றத்தை) உணர்தல் அதனை அறிக்கையிடல் மன்னிப்புப் பெறுதல் என்பன இது நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக ஏற்படுத்திய ஜீவ வழியாகும். எனவே மன்னிப்பு என்பது தவறை உணர்ந்து ஒப்புரவாகுவதினால் ஏற்படக்கூடிய மறுமலர்ச்சியின் உணர்வாகும்.

அனைத்து மக்களினது ரட்சிப்பையே தனது நீதியாக நடைமுறைப்படுத்த வந்த ஆண்டவர் மன்னிப்பின் சிந்தையை ரட்சிப்பின் வாசலாக கருதினார். மன்னித்தலும் மன்னிக்கப்படுதலும் நாம் வாழ்க்கையில் சந்திக்கவேண்டிய கட்டாய அனுபவங்களாகும்.

## இரண்டாம் வார்த்தை

"மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் இன்றைக்கு என்னோடுகூடப் பரதீசில் இருப்பாய்"

சிலுவை மரத்தில் தொங்கிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்த்துவின் வாயிலிருந்து புறப்பட்ட இரண்டாவது வார்த்தை அது. இரட்சிப்பின் குரல். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுடன் இன்னும் இருவர் கொலைத்தண்டனை பெற்றனர். அவர்கள் இருவரும் கள்வர்கள் என்று சுவிஷேசங்களில் தரப்பட்டு இருக்கின்றது. ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து கள்வர்கள் மத்தியில் தொங்குகிறார். கொலைத் தண்டனையை சிலுவை மரத்தில் நிறைவேற்றுவது உரோமப்பேரரசின் ஒழுங்காக இருந்து வந்தது. உரோமச் சட்டப்படி குற்றம் காணப்பட்டவர்கள் அந்த இரு கள்வர்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசுக் கிற்ஸ்த்துவோ எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் உட்பட்டவரல்ல. யூதர்கள் நடைமுறைப்படுத்தி வந்த நியாயப் பிரமாணத்துக்கு அவர் மாறுபட்டவர் என்று யூதர்களால் கருதப்பட்டார். இது குறித்து நாம் அவரது நிலையை நோக்குவோமானால் யூதர்களால் தவறாக நடைமுறைப்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல அதை நிறைவேற்றவே வந்தேன்

என்றார். இதன் மூலம் யூதர்களின் குற்றச் சாட்டுக்கள் அவர்களது அஞ்ஞானத்தால் எழுந்ததாகும்.

அஞ்ஞானமும், ஞானமும் சிலுவையில் தொங்கிய இருவரினதும் வாயிலிருந்து வார்த்தைகளாக வெளிப்பட்டதை நாம் காணலாம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது மாத்திரமல்ல அவரது தலைக்கு மேல் ''யூதருடைய இராஜா'' என்று ஒரு வாசகம் எழுதித் தொங்கவிடப்பட்டது. அவர் போர் வீரர்களால் '' நீ யூதருடைய இராஜா என்றால் உன்னையே நீ இரட்சித்துக்கொள்'' என்று இகழப்பட்டார். தொங்கிய கள்வர்களில் ஒருவன் ஆண்டவரைப் பார்த்து நீ மேசியாவானால் உன்னைக் காப்பாற்றி எங்களையும் காப்பாற்றி விடு என்றான். அவன் தன்னை மேசியா என்று மக்களுக்கு வெளிப்படுத்த உலகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் இந்த உபாயத்தை தன் அஞ்ஞானத்தின் நிமித்தம் வெளிப்படுத்தினான் இதைக் கேட்டுக்கொண்டிருந்த அடுத்த கள்வன் அவனிடம் மரணதண்டனையைப் பெற்றிருந்தும் இறைவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நீயும் நானும் எங்கள் கொடிய செயல்களின் நிமித்தம் தண்டிக்கப்பட்டோம் அது மறையானது. ஆனால் இவரோ ஒரு பாவமும் செய்யாதவராயிற்றே என்றான்.

இது அவன் மற்ற கள்வனுக்கு கூறிய வார்த்தை மட்டுமல்ல அவர் ஒரு பாவமுற்றவர் என்று அவன் பகர்ந்த சாட்சியுமாகும். மேலுமு அவன் ஆண்டவரை நோக்கி ஆண்டவரே நீர் உம்முடைய இராட்சியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இதன் மூலம் அந்த களவன் ஆண்டவரை எவ்வாறு புரிந்து கொண்டான் என்று விளங்குகிறது. இயேசுவின் தலைக்கு மேல் எழுதப்பட்ட யூதருடைய இராஜா என்ற வாசகம் அவரை இகழ்வதற்காகப் போடப்பட்டது. ஆனால் இந்தக்கள்வனுக்கோ அவர் யூதருடைய ராஜாவாகவே காணப்பட்டார் யூதர்கள் தங்களை ஆளும்படி வருவார் என்று எதிர் பார்த்த மேசியா அவரே என்பதை தெரிந்து கொண்டான். இந்த சிந்தை அவனில் காணப்பட்ட ஒரு ஞானம் என்றே கூறவேண்டும். இயேசு தம் சீடர்களைப் பார்த்து என்னை யார்? என்று கூறுகிறீர்கள் என்று கேட்டபோது அவருக்கு பதிலாக '' நீர் மெய்யாகவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றான். அப்பொழுது யேசு அவனை பார்த்து '' பரிசுத்த ஆவியானவரே'' இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார்'' அந்த ஞானமே இந்த கள்வனின் வாயில் இருந்து வெளிப்பட்டது.

சிலுவையில் மரிப்பது தனது முடிவு என்று உணர்ந்த போதும் தன்னுடன் சிலுவையில்த் தொங்கும் இயேசுக்கிறிஸ்து இந்த மரணத்தை மேற்கொண்டு தனது இராட்சியத்தின் அதிபதியாய் விளங்குவார் என முழுமையாக நம்பினான். இதனால் அவன் அவரை

முன்னரே அதாவது அவர் பணியாற்றிய நாட்களில் அறிந்து கொண் டான் எனக் காணமுடிகிறது எனவே தான் அவர் பாவமற்றவர் என்று அறிக்கை செய்தான் ஆண்டவர் அவனது விண்ணப்பத்துக்கு செவிசாய்த்தார் ''இன்று நீ என்னோடு பரதீசில் இருப்பாய்'' என்றார். பலவீனமுற்றவராய் மரணத்தருவாயில இருந்த அவரிடம் இரட்சிக்கும் அதிகாரம் இருந்தது கலிலேயாக் கடலோரம் சுற்றித் திரிந்து இரட்சிப்பின் பணியாக போதனைகளையும், அற்புதங்களை யும் நடப்பித்த அவர் சிலுவையில் தொங்கிய போதிலும் ரட்சிப்பின் பணியை நடப்பித்தார்,

நமது வாழ்க்கையின் குறிக்கோள் கடவுளின் உறவுக்குள் ளாவதாகும். இந்த வாழ்வு அந்தக் கள்வனுக்குக் கிறிஸ்துவால் உறுதிப்படுத்தப்பட்டது. அவனுக்கு இந்த பாக்கிய வாழ்வு எப்படிக் கிடைத்தது? அவன் தன் தவறை உணர்ந்தான். கிறிஸ்துவிடம் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தான். இது நமக்கு ஒரு பாட மாக இருக்கிறது. நாம் இந்த உகை வாழ்க்கையை மாத்திரம் எண் ணிப்பாராமல் அதற்கு மேலான வாழ்வு ஒன்று உண்டு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வாழ்வு ஆண்டவர் நம்மிடம் எதிபார்க்கும் வாழ்வாகும். மனிதன் கீழ்ப்படியாமையினால் இழந்து விட்ட இந்த வாழ்வைத் திரும்பப் பெற்று தரவே கிறிஸ்த்து தேவ மைந்தனாக அவ்வுலகிற்கு வந்தார். அன்பின் வழியை காணச் செய் தார். அன்பின் முழுமையை சிலுவை பரியந்தம் பிதாவுக்கு கீழ்ப் படிந்தவராக இவ்வுலகத்தில் வாழ்ந்து சிலுவையில் சிந்திய இரத்தத் தால் அனைத்து மக்களின் பாவங்களையும் கழுவினார். அவரின் இக்கிருபை மிக்க செயலுக்கு நமது மனந்திரும்புதலும், நமது வாழ்வை அவருக்கென்றே ஒப்படைப்பதும் நமது கடமை இதனையே மைந்த னாக வந்த அவர் கற்பனைகளாகத் தந்தார். அவர் நம்மை ஒப்படைத் தல் என்பதை, ''உன் கடவுளாகியகர்த்தரிடம் உன் முழு இருதயத் தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனத்தோடும் உன் முழுப்பலத்தோடும் அன்பு கூறுவாயாக'' என்றார்.

இந்த ஒப்படையினால் அவரது அன்பு எம்மில் கிரியை செய் யத்தொடங்குகிறது. இதனால் அடுத்வன் மேல் அன்பு கொள்ளும் படி ஏவப்படுகிறோம். இந்த அன்பின் பணியை அனைவரும் ஏற்று நித்திய வாழ்வு பெறுவோமாக.

## மூன்றாம் வார்த்தை

யோவான் 19: 26, 27

**ஸ்திரீயே அதோ உன் மகன், அதோ உன் தாய்.**

சிலுவை மரத்தில் தொங்கிய ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ் துவின் வாயிலிருந்து புறப்பட்ட மூன்றாவது வார்த்தை. அது பாசத் தின் குரல். தேவமைந்தனாக வந்த ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து

தனது பணியின் போது ஒரு சாதாரண மனிதனை போல வாழ்ந் தார். ஏனைய மனிதரிடம் காணப்பட்ட உணர்ச்சிகளவரிடமும் காணப்பட்டன. ஒரு தாயின் மன நிலையை நன்கு புரிந்திருந்தார். இப்படியாக இகழப்பட்டவராக, குற்றம் சாட்டப்பட்டவராக மற்ற வர்கள் பார்வையில் காட்சிப்பொருளாக தொங்கிக் கொண்டிருந்த வேளையில் அவருடைய சீடர்கள் அவர் நிமித்தம் பாடுகளைச் சந்திக்கப் பயந்தவர்களாக மறுதலித்தவர்களாக இருந்த போதிலும் அவரின் பாடுகளில் பங்கெடுத்த சிலரை நாம் காணமுடிகிறது தாயாகிய மரியாளும் மற்றும் பெண்களும் அவருடைய அன்பான சீஷரும் சிலுவையண்டையில் நின்றார்கள். அவருடைய அன்பான சீடன் என்று கருதப்பட்டவர் யோவான். அவருடைய வார்த்தையில் வல் லமையும் கிரியையில் அற்புதமும் காணப்பட்டபோது பெருந்திரளான மக்கள் அவரது வார்த்தைக்காக சூழ நின்றனர். ஆனால் அவன் துன்பத்திற்குள்ளான போது மிகச் சிலரே அவரோடுநின்றனர். ஆம் இது மனிதவாழ்வில் காணும் உண்மை. அந்தஸ்தும் செல்வாக்கும் இருக்கும்போது சூழ்ந்து நிப்பவர் பலர். ஆனால் ஒன்றும் அற்ற நிலையில் கேட்பார் அற்ற நிலை.

இங்கே பயத்தோடும், திகிலோடும் ஆண்டவரின் பாடுகளைப் பார்த்து கலங்கி கணணீர் விட்டுக்கொண்டிருக்கும் அடியார்களாக அவரது தாயாகிய மரியாள், மகதலேனா மரியாள், யோவான் போன்றவர்களை இயேசு காண்கிறார். ஒருவருடைய துன்பத்தில் பங்கெடுப்பவர்களிடம் அன்பின் சிந்தனையை காணமுடியும். அன்பின் கிரியைகள் மூலமாகவே நமது உறவு வெளிப்படுகிறது. ஒருவன் தன் தாயை அவள் பெற்றவள் என்பதற்காகவல்ல, அவள் காட்டிய விசேட அன்பின் நிமித்தமே அம்மா என்று அழைக்கிறான். இவ்வி தமே நமது விசேட அன்பின் காரணமாகவே தாயாகிய மரியாள் யோவான மற்றும் பெண்கள் அங்கே கூடி நின்றனர். இந்த அன்பின் கிரியைகளை ஆண்டவர் நோக்காமல் இல்லை தாயை சகோதரரை அவர் காண்கிறார்.

ஒரு தடவை அவர் பணியாற்றிக்கொண்டிருந்த போது இயேசுவின் தாயும் சகோதரரும் அவரைப்பார்ப்பதற்காக வந்தனர். இயேசு போதித்துக் கொண்டிருந்தபோது சனநெருக்கடி அதிகமாக இருந்தபடியால் அவர்களால் உள்ளே போகமுடியவில்லை. எனவே அவருடைய தாயும், சகோதரரும் அவரைப்பார்க்க வந்ததாக அறி விக்கப்பட்டது. அப்பொழுது அவர் (லூக் 8:21) இறைவனின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கிறவர்களே எனக்கு தாயும் சகோதரரும் ஆவார்கள் என்று அவர்களிடம் கூறினார். அப்படியே இங்கேயும் புதிய உறவு அவருடைய வார்த்தையின் படி நிறைவுபடு

கிறது. இயேசு தனது ஸ்தானத்தை யோவானுக்கு கொடுத்து அதனை மரியாளுக்கு அறிவிக்கின்றார். அப்படியே யோவானுக்கும் புதிய பணியை புதிய உறவாக நிறைவேற்றும்படி பணிக்கிறார். அவர் தன் தாயை நோக்கி ஸ்திரீயே அதோ உன் மகன் என்றார் பின் சீடனை நோக்கி அதோ உன தாய் என்றார்.

துயரம் பீடித்த இடத்தில் ஆறுதல் படுத்தும் பணி தேவை. பாடுகள் மரணம் என்பன நமக்கு துயரம் தரும் அனுபவங்களாகும். இங்கே ஆண்டவராகிய இயேசுக் கிறித்து பட்டபாடு பெற்ற தாய்க்குப் பெருந்துயரத்தை ஏற்படுத்தியது. இந்தத் துயரத்திலிருந்து விடுபட அவர் கொடுத்த ஆறுதலான வார்த்தைதான் அது " துயரப்படு கிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள் " என்று அப்போதனையை இங்கே நினைத்துப்பார்க்க முடிகிறது. மரியாள் யோவான்ஸ்நானகனின் தாயாகிய எலிசபெத்தினால் பாக்கியவதி என்று வாழ்த்துப்பெற்றாள். காரணம் மேசியாவாக வந்த கிறிஸ்த்து இயேசுவை அவள் கர்ப்பத்தின் கனியாக ஏற்றுக்கொண்டதனால் அந்தப் பாக்கியவதி என்ற வாழ்த்து இயேசுக்கிறிஸ்த்துவின் பாடுகளின் போது நிறைவுபடுகிறது. கிறிஸ்துவின் நிமித்தம் கிறிஸ்த்துவுடன் மரியாள் துயரப்பட்டாள் என்று காண்கிறோம். கிறிஸ்துவின் துயரம் அனைத்து மக்களுக்காக, ஆனால் மரியாளின் துயரம் தாய் என்ற நிலையில் கிறிஸ்துவுக்காக அனைவருக்காகவும் கிறிஸ்து பட்ட துயரும் அனைவரையும் உயிர்த்தெழவும் ஆறுதலடையவும் செய்தது மரியாள் பட்ட துயரம் அனைவரையும் ஆறுதல் அடையச் செய்யும் மேசியாவின் தாய் என்ற பாக்கிய நிலையை உறுதிப்படுத்துகிறது.

ஒரு குடும்பத்தில் ஒருவர் மரணமடைந்தால் அவரது பணி தொடரும் விடையத்தில் ஒரு இடைவெளி ஏற்படுவதை நாம் அறிவோம் அப்படியே மரியாளின் குடும்பத்திலும் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ் துவின் மரணத்தினால் ஒரு இடைவெளி ஏற்படுகிறது. இந்த இடை வெளியை நிரப்புவதற்கு எற்ற விதத்தில் அவர் தன் அன்பான சீடன் யோவானைத் தெரிந்து கொண்டார். எனவே அவர் யோவானை நோக்கி " அதோ உன் தாய் " என்றார். இதனால் யோவான் குடும்ப நிலையில் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான் என்று காண் கிறோம். உலகில் அனைத்து மானிடரும் உடன் பிறவாவிட்டாலும் சகோதரர்கள். இந்த சகோதரத்துவம் இக்கிரியைகளினால் விளங்கு கின்றது. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுடன் பிறவாவிட்டாலும் அன்பின் நிமித்தம் அந்த சகோதரத்துவத்தை யோவான் பெறுகிறான். அவரது சீடர்களாக நாம் நம்மை ஒப்புக் கொடுக்கும் போது அவருடன் சகோதரராகும் அந்தஸ்த்தையும் நாம் பெறுவது நிச்சயம். முடிவு பரியந்தம் இந்த விசுவாசத்தைக் காத்துக்கொள்பவன் இரட்சிக்கப்

படுவான் என்று இங்கே போவான் அவரது மரணத்தின் போதும் நிலைத்து நின்றான். அதனால் சகோதர அந்தஸ்த்தையும் பெற்றுக் கொண்டான்.

தந்தையாக தாயாக பிள்ளையாக இன்னும் சமுதாயத்தின் உறுப்பினராக விளங்கும் யாவரும் கடவுளின் பிள்ளைகளாக பொறுப்புடையவர்களாக நடப்போமாக. இந்தப்பொறுப்பை உத்தரவாதத்துடன் நிறைவேற்ற கடவுளை வேண்டி நிற்போமாக.

## நான்காம் வார்த்தை

**ஏலி, ஏலி லாமா சபக்தனி: என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?**

சிலுவையில் தொங்கிய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து ஏழுவார்த்தைகளைப் பொழிந்து ஜீவனை விட்டார். என்று காண்கின்றோம். இதன் முதல் மூன்று வார்த்தைகளையும் காணும் போது அவரின் மனிதத்தன்மையை மனித உணர்வுகளோடு வெளிப்படுத்தியதாக காணலாம். பின்னுள்ள மூன்று வார்த்தைகளும் அவருடைய தெய்வீகத்தைப் புலப்படச் செய்கிறது. ஆனால் நான்காம் வார்த்தை இரண்டுக்கும் இடைப்பட்டதாக காணலாம். அதாவது மனிதத்தன்மைக்கும், தெய்வீகத்தன்மைக்கும் இடைப்பட்ட நிலை. அவர் கைவிடப்பட்ட நிலையில் எழுப்பிய வார்த்தையாக, கலக்கத்தில் எழுந்த குரல் போல் காணப்படுகிறது. '' என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் '' என்ற இவ்வார்த்தை 22ம் சங்கீதத்தின் முதலாம் வார்த்தையாகக் காணப்படுகிறது. தாவீது தான் ஆண்டவரால் கைவிடப்பட்டிருக்கிறேன் என்று உணர்ந்து அச்சங்கீதத்தைப் பாடினார் என்று புரிந்து கொள்ளலாம். எனவேதான் ஆண்டவரை நோக்கி '' என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று பாடினார்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தனது வாழ்க்கையில் திருமறையை யூத வழக்கத்தின்படி நன்கு கற்றறிந்தார். என்று அறிவோம். அவர் சாத்தானால் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டார் என்றும் அவர் சோதனையை திருமறையில் உள்ள வார்த்தையினால் மேற்கொண்டார் என்றும் சுவிஷேசம் கூறுகின்றது. அதன் மூலம் சோதனையிலிருந்து விடுபடுவதற்கு திருமறை வார்த்தையே ஏற்றது எனக் காணச்செய்தார். சங்கீதத்தில் உள்ள அந்த வார்த்தைக்கான சூழ்நிலை இவரிடம் காணப்பட்டிருக்கலாம். எனவே தானும் அந்த வார்த்தையை எடுத்தாண்டிருக்கலாம்.

இந்த வார்த்தையை நாம் இன்னொரு வகையில் புரிந்து கொள்ளலாம். அது எப்படியெனில் தூக்கி வளர்க்கப்பட்ட குழந்தை நடக்கும் பருவம் வந்து விட்டால் அது தரையில் நடக்கத்தான் வேண்டும். இப்படி நடக்கச் செய்ய பெற்றோர் முயற்சிக்கும் போது அக் குழந்தை தரையில் இறக்கிவிடப்படும். அப்போது அக்குழந்தை பெற்றோரைப்பார்த்த பரிதாபகரமாக அழும். தூக்கி அணைத்துக் கொள்ள வேண்டும் என்று பெற்றோரிடம் பிடிவாதம் பிடிக்கும். ஆனால நடக்கக் கற்றுக் கொண்ட பின் அது அந்த நிலை கண்டு மகிழும். அப்படியே இங்கேயும் கடவுள் அவரை மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்குள் உட்படுத்தினார். இது அவருக்கு வளர்ச்சிப்படி. தூக்கி அணைக்கப்பட்ட நிலையிலிருந்து தரையில் நடக்க இறக்கி விடப்பட்ட குழந்தையைப் போல உணர்வு கொண்டவராய் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்றார் மனிதனுக்குரிய நிலை பெற்றோருடன் குழந்தை சார்ந்து இருப்பது போல கடவுலோடு சார்ந்து இருப்பது ஆகும். இந்த நிலையை ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தனது போதனையில் புலப்படுத்தியிருக்கிறார். ''ஒருவன் குழந்தையைப் போல் ஆகாவிட்டால் தேவனுடைய இராட்சியத்தில் பிரவேசிக்கமாட்டான்'' என்கிறார். அவர் மனிதனாக வாழ்ந்த போது பிதாவுக்கேற்ற மைந்தனாகவே வாழ்ந்தார். அவர் தம் கீழ்ப்படிதலினால் அனைத்து மக்களினது பாவத்தை மன்னிக்க ஏதுவானார். இதனால் அனைத்து மனிதருக்கும் மேய்ப்பனாக விளங்கினார். அவர் உலகத்துக்கு ஊழியம் கொள்பவராக அல்ல ஊழியம் செய்பவராக வந்து பணியாற்றினார். அனைத்து மக்களுக்கும் போதனைகளாலும், உவமைகளாலும் பரலோக இராச்சியத்தின் பணியை நன்கு விளக்கினார். அவர் பரலோகஇராட்சியத்தின் அதிபதியாக ஏற்படுத்தப்பட்டார். மனித நிலையிலிருந்து அப்பதவிக்கு உயர்த்தப்பட்டார். எனவே என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்? என்பது ஒரு படியிலிருந்து இன்னொரு படிக்கு உயர்த்தப்பட்ட அனுபவத்திலிருந்து எழுந்ததாகும்.

அவர் மனிதனாக உலகத்தில் வாழ்ந்த போது தான் பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்பதை தனது ஊழியத்தின்போது பல தடவைகள் உறுதிப்படுத்தினார். அவர் பன்னிரண்டு வயதானபோது பஸ்கா கொண்டாட்டத்திற்காக பெற்றோருடன் எருசலேமுக்கு சென்றார். அவர் அங்கே ஆலயத்தலைவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். பெற்றோருடன் திரும்பிச்செல்லாத அவரை அவரது பெற்றோர்கள் தேடிவந்தபோது எருசலேமில் ஆலயத்தலைவர்கள் மத்தியில் இருந்தார். இதனைப்பார்த்த அவர்கள் ஆச்சரியப்பட்டனர். அவருடைய தாயார் அவரைப் பார்த்து '' ஏன் எங்களுக்கு இப்படிச்

செய்தாய்? உன்னை எங்கெல்லாம் தேடினோமே '' என்றார்கள் அதற்கு இயேசு '' நீங்கள் ஏன் என்னைத் தேடினீங்கள்? என் பிதாவுக்கு அடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியது என்று அறிவீர்களா' என்றார்.

பிதாவுக்குகந்த மைந்தனாக வாழ்ந்த அவர் மைந்தனுக்குள்ள அனைத்து உத்தரவாதங்களையும் தனது வாழ்க்கையில் நடப்பித்தார். அவர் பிதாவிடம் காட்டிய விசுவாசமும் கீழ்ப்படிதலுமே அவரது எல்லாப்பணிகளுக்கும் பெலனாக விளங்கியது. மனிதனின் வீழ்ச்சிக்கு காரணம் கடவுள் மீது கொண்ட அபிசுவாசமும், கீழ்ப்படியாமையுமாகும். இந்த உண்மையை ஆதிஅறிவாக விளங்கும் ஆதியாகமம் நமக்கு நன்கு தெளிவுபடுத்துகிறது. ஆதாமின் கீழ்ப்படியாமையினால் அனைத்து மக்களும் பாவத்துக்குள்ளானார்கள். இந்த நிலையிலிருந்து மைந்தனாக வந்த ஆண்டவரான இயேசுக் கிறிஸ்த்து தனது மைந்தனுக்குரிய தன்மையால் சிலுவை பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி அந்த ஒரு மனிதனால் அனைவரும் பாவத்துக்குள்ளானது போல் அவரது கீழ்ப்படிதலால் அனைவரும் மீட்பைப் பெற்றனர்.

இந்த மீட்பின் பணியைக் கீழ்ப்படிதல் மூலம் பெற்றுக் கொடுக்க அவர் நிலையிலிருந்து பிதாவின் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இந்த உயர்த்தப்படுதலினால் அவர் சந்தித்த அனுபவமே அவரை '' என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று குரல் கொடுக்கச் செய்தது.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நிலையில் அவருக்கிருந்த உடல் வாதையைக் குறித்து நினைத்துப் பார்ப்போமானால், அவர் வாதையின் நிமித்தம் கலக்கமடைந்து கதறியிருக்கலாம் என எண்ணலாம். ஆனால் அவரோ தான் நிறைவேற்ற வந்த பணிக்கு இந்தப்பாடுகள் இருக்கும் என்பதை முன்னரே தெரிந்து கொண்டார். இதனைத் தனது போதனையில் பல தடவையில் கூறியிருக்கிறார். தான் பிதாவிலும், பிதா தன்னிலும் இருக்கிறார் என்பதையும் தான் பிதாவிடம் செல்லும் காலம் வரும் என்றும் கூறியிருக்கிறார். '' உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக பிதாவாகிய தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் '' என்று ஆறுதல் வார்த்தை கூறிய ஆண்டவர், ஒரு போதும் விசுவாசிகளைப்போல பிதா தன்னைக் கைவிட்டார் என்று எண்ணியிருக்க மாட்டார். ஒருவன் என்னிடத்தில் அன்பு கூறுவானேயாகில் அவன் பிதாவினிடத்திலும் அன்பு கூறுகிறான் என்றார். மேலும் தான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறார் என்பதை விசுவாசியுங்கள் என்றார். எனவே அவர் உடல் வாதையின் நிமித்தம் கலங்கவில்லை என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

பிதாவிடம் செல்லும் காலம் வரும் என்ற அவர் மைந்தனுக்குரிய (மனித) நிலையிலிருந்து பிதாவின் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டார் என்பதே பொருத்தமானது. அவர் மனிதனுக்குரிய அனைத்தையும் விட்டு பிதாவின் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்ட நிலையில் தன்னை வழிநடத்திய பிதா அவருக்கு காணப்படாத போது அவர் ''என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்றார்.

அப்படியே நாமும் பிதாவுக்கேற்ற பிள்ளைகளாக கிறித்ஸ்துவின் மூலம் உயர்த்தப்பட்ட விசுவாசத்துடன் நம்மை அவருக்கென்றே ஒப்படைப்போமாக.

## ஐந்தாம் வார்த்தை

யோவான் 19: 28

'' தாகமாயிருக்கிறேன் '' என்றார்.

ஆண்டவராகிய இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட ஐந்தாவது வார்த்தை அது. தாகத்தின் குரல் சிலுவையில் அறையப்பட்ட நிலையில் அவருக்கு இருந்திருக்கக் கூடிய வேதனை எத்தனை கொடியது என்பதை நாம் அறிவோம். அத்துடன் களைப்படைந்த அவர் பசி தாகமுடையவராகவும் இருந்திருப்பார். எனவே அவர் '' தாகமாயிருக்கிறேன் '' என்று தண்ணீர் விடாயின் நிமித்தம் குரல் கொடுத்திருக்கலாம். மரணப்படுக்கையில் இருப்பவர்கள்கூட தாகமாயிருப்பது வழக்கம். அவ்வேளையில் பால் அல்லது பெலமளிக்கக் கூடிய நீர் பதார்த்தங்களைப் பருகக் கொடுப்பர். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவும் தாகமாயிருக்கிறேன் என்ற போது ஒருவகைப்பானம் கொடுக்கப்பட்டது. அவர் அதைப்பருகினார் என்றும் காண்கிறோம். அவருக்கு கொடுக்கப்பட் பானம் கசப்புக் கலந்தது என்னும் வேதவாக்கியம் நிறைவு படும்படி இப்படி நடந்தது என்றும் குறிப்பிடப்படுகிறது. இதுகுறித்து திருமறை வாக்கியத்தை 69ம் சங்கீதத்தில் 21ம் வாக்கியத்தில் காணலாம் '' நிந்தையும் வேதனையும் உடையவனாக இருந்தபோது என் தாகத்துக்கு கசப்பான காடியை எனக்கு கொடுத்தார்கள் என்று சங்கீதக்காரன் கூறுகிறார். கிறிஸ்துவும் நிந்தையும் வேதனையும் உடையவராகத் '' தாகமாயிருக்கிறேன் '' என்றபோது அவருக்கு கசப்பான காடி கொடுக்கப்பட்டது.

ஆண்டவரான இயேசுவில் காணப்பட்ட தாகம் நாம் நினைப்பது போல சரீரத்தைத் திருப்திப்படுத்தும் தாகம் அல்ல. அது மேலான அர்த்தத்தைக் கொண்டது. அவர் தமது பணிக்காலங்களில் தாகம் என்ற பதத்தை வேறுவகையில் அர்த்தப்படுத்தியிருக்கிறார்.

அதனை நாம் வேட்கை அல்லது வாஞ்சை என்று குறிப்பிடலாம். யாக்கோபுவின் கிணற்றண்டையில் தண்ணீர் மொண்டு கொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து ''தாகத்துக்கு தண்ணீர் தா'' என்றார். மேலும் அவர் அவளுடன் செய்த உரையாடல் மூலம் அவர் தண்ணீர் விடாய் உடையவராய் அப்படிக் கேட்டாரா என்று சிந்திக்கத் தூண்டப்படுகிறோம். அவர் கூறிய இன்னொரு வார்த்தையை காண்போம். ''உன்னுடன் பேசுபவர் யார் என்று நீ அறிந்தாயானால் நீயே என்னிடம் தண்ணீர் கேட்டிருப்பாய். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ தாகமுண்டாகாது'' என்றார். அப்படியானால் அவர் தாகத்துக்கு தண்ணீர் தா என்று கேட்டதன் பொருள் என்ன? அவர் கிணற்றண்டையில் கேட்டதால் தண்ணீர் விடாயின் நிமித்தம் கேட்டார் எனக் காணுகிறோம்.

கிணற்றண்டை வந்தவள் சமாரியப் பெண் என்று அறிந்ததினால் அவளோடு உரையாடலைத் தொடங்க அவர் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தியிருக்கலாம். அங்கே நடந்தது ஒரு உரையாடலே என்றும் அது பயனுள்ள அர்த்தமுள்ள உரையாடலாக இருந்தது என்றும் காண்கிறோம். இந்த உரையாடலின் பிரதிபலிப்பாக என்ன நடந்தது என்று காணும் போது அவருடைய தாகம் எது என்பதை நம்மால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. சமாரியாவில் நடைபெற்று வந்த தவறான வணக்கம் உணர்த்தப்பட்டது. வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட மேசியா யார் என்று வெளிப்பாடாயிற்று இந்த மேசியாவை அனைத்து மக்களும் கண்டு கொள்ள வேண்டும் என்பது அவரது தாகம்.

மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்ட அவர் தன் பணியை தாகத்துடன் (பலத்த எதிர்பார்ப்புடன்) ஏற்றுக்கொண்டார். அனைத்து மக்களுக்கும் அவர் இரட்சிப்பின் நீதியை நடப்பிக்கும் அதிபதியாக பணியை ஏற்றார். வழி தவறிய மக்களுக்கு தனது நீதியை விளங்கப்பண்ணுவதே அவரது தாகம். அவர் தாகம் என்ற பதத்தை விரிவான அர்த்தத்தோடு பயன்படுத்தினார் என்பதற்கு இன்னொரு உதாரணத்தை மலைப்பிரசங்கத்தில் ஆற்றிய வசனங்களில் இருந்து காணலாம். ''நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தி அடைவார்கள்'' என்று போதித்தார் (மத் 5:6) அதில் சரீரத்தில் ஏற்படக்கூடிய பசி தாகம் போன்ற உணர்வுகளைப் பயன்படுத்தி விளக்குகிறார். அவருடைய போதனைகள் அதிகமாக உவமைகளால் விளக்கப்பட்டது. அது போல இங்கே உணர்வுகளால் செய்திக்கு விளக்கம் தருகிறார். பசி தாகம் என்பன மனிதனுக்குள் உணரப்படும் போது அவன் அதை

எப்படியும் தீர்த்துக்கொள்ளவே முயற்சிப்பான் அப்படியே அவரும் இரட்சிப்பாகிய நீதியை நடப்பிப்பதில் தாகம் உள்ளவராக காணப் பட்டார்.

மனித குமாரன் தனது மகிமை பொருந்தினராக சிங்காச னத்தில் வீற்றிருப்பார் என்றும், அவருடைய நீதி எவ்வாறாக இருக் கும் என்றும் தன் போதனையின் போது கூறியிருக்கிறார். நீதிமானாக எண்ணப்படுபவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்பட வேண்டிய கிரியை களை அவர் கூறினார். பசியாக இருப்பவர்களுக்கு போசனம் கொடுப் பதும் தாகமாய் இருப்பவர்களுக்கு தாகத்தை தீர்ப்பதும் இப்படி யாக ஒருவருடைய தாகத்தை இன்னொருவர் தீர்ப்பது நீதிமானாக எண்ணப்பட்டவரின் பணி என்று காணச் செய்தார். ''தாகமாய்'' இருக்கிறேன் என்று கூறிய ஆண்டவர் அனைத்து மக்களையும் என் றுமே தாகமடையாது வழி நடத்த வல்லவர்.

சரீர தாகத்தை உணரும் நாம் ஆன்ம தாகத்தையும் உணர்ந்து கொள்ள முடியும். ஆன்ம தாகத்தின் தேவை நாம் பெலவீனப்பட் டிருக்கும் போது வெளிப்படும். இந்த உலக வாழ்வில் நாம் எதையும் செய்ய முடியாத நிலையில் எங்களுக்கு திருப்தியும் ஆறுதலும் அளிக்கும் வல்லமை ஒன்று நமக்கு கிடைக்கிறது. ஆன்ம தாகம் நமக்கு உணரப் படுவதால் நாம் பெறும் கிருபையே அது. திருந்திய மைந்தன் உவமை யில் இரண்டாவது குமாரன் தனது ஆஸ்திகள், செல்வங்கள் அனைத் தையும் இழந்த நிலையில் கூட இருநத தோழர்களினால் கைவிடப் பட்ட அவன் சரீர தாகத்தை மாத்திரமல்ல ஆன்ம தாகத்தை உடை யவனாக காணப்பட்டான். அவனது ஆன்ம தாகம் சகல பாவங்களி லிருந்தும் மீட்கப்பட்டு அவனை தந்தையோடு இணைத்து வாழும் திருப்தியான வாழ்வை அளித்தது. தந்தையுடன் இணைந்து வாழ்வது அவன் பெறவேண்டிய நீதியாகும்.

42ம் சங்கீதத்தில் தாவீது தனக்குள் உண்டான தாகம் தேவனோடு இருப்பதற்கே என்று பாடினார். மானானது நீரோடை களை வாஞ்சித்து கதறுவது போல தேவனே என் ஆத்தமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல் ஜீவன் உள்ள தேவன் மேல் தாகமாயிருக்கிறது என்று பாடினார். ''தாகமாயிருக் கிறேன்'' என்று ஆண்டவர் கூறியதன் அர்த்தத்தை இத்தாவீதின் சங்கீதம் நமக்கு நன்கு விளக்குகிறது.

என்றுமே தாகமடையாத தண்ணீரைக் கொடுக்கக்கூடியவர். சமாரியப்பெண்ணிடம் ''தாகத்துக்குத் தா'' என்று கேட்டார். அப்படியே அனைத்து மக்களின் தாகத்தை தீர்க்க வந்த அவர் தாகமாயிருக்கிறேன் என்றார்.

# ஆறாம் வார்த்தை

யோவான் 19: 30

சிலுவையில் தொங்கிய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வாயிலிருந்து புறப்பட்ட ஆறாவது வார்த்தை ''முடிந்தது'' என்பதாகும் ஆம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து மனிதனாக வந்து தன் பணியை முடித்துக் கொண்டார். எனவே அவர் ''முடிந்தது'' என்றார். இந்த உலகத்தில் வாழும் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பல உண்டு. நாம் பிறந்த நாள் முதல் மரிக்கும் வரை பணியாற்ற வேண்டியவர்கள். அவனவன் பணிக்கு ஏற்ற விதமாய் அவனவனுக்கு தாலந்துகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒருவனும் தனது பணியை இவ்வுலகத்தில் நிறைவேற்றி முடித்தது கிடையாது. எனவே தன் பணி முடிந்தது என்று கூறுவதற்கு தகுதியற்றவன். ஆனால் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து ஒருவரே இந்த உலகில் தன் பணியை நிறைவுறச் செய்தவர். எனவே அவர் ''முடிந்தது'' என்று கூறும் போது அதற்கு அர்த்தமுண்டு.

அவரது பணி நிறைவானதற்கு காரணம் என்னவென்று பார்ப்போமானால் அவர் பிதாமேல் கொண்டுள்ள விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையுமே காணலாம். தந்தைக்கேற்ற மைந்தனாக அனைத்து மக்களையும் வழி நடத்த மைந்தனாக வந்தார். மைந்தனின் தன்மையை மனிதனாக முழுமையாக வாழ்ந்து காட்டினார் தந்தையிடம் வைத்த விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் அதனால் ஏற்படக்கூடிய நித்திய வாழ்வை போதனையாலும் சாதனையாலும் நடப்பித்துக் காட்டினார். அனைத்து மனிதர்களது பணிகளும் நிறைவுபட்டுக் காணப்படுமாயின் இவ்வுலகத்தில் ஒரு குறையும் இருந்திருக்காது. எவ்வித பணியையும் செய்யாதவர்களும் உள்ளனர். மனிதனின் வாழ்வு முழுமை பெறாதிருத்தல் மனிதன் செயலற்றவனாக விளங்குவதற்கான காரணங்களை அழகாக போதனை மூலம் தந்தார். அவர் கூறிய தாலந்துகளின் உவமை அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதில் எஜமானொருவன் தேவைக்கேற்றதாக தனது பணத்தை ஒருவனுக்கு ஐந்தும் இன்னொருவனுக்கு இரண்டும் இன்னொருவனுக்கு ஒன்றுமாக மூவருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டு தான் திரும்ப வரும்போது கணக்கை ஒப்புவிக்கும்படி சொல்லிச் சென்றான். சென்ற அவன் திரும்ப வந்தபோது ஐந்தும் இரண்டும் பெற்றவர்கள் தாம் தமக்குத் தந்ததை இரு மடங்காக்கியதை அவதானித்தான். எஜமான் அவர்களது செயலைக்கண்டு மகிழ்ந்தான். ஆனால் மூன்றாம் மனிதனோ தனக்கு ஒரு பணம் கிடைத்ததன் நிமித்தம் எஜமானின் நம்பிக்கை அற்றவனாக அப்பணத்தையும் உபயோகிக்கத்தவறி விட்டான். முதல் இரண்டுபேரும் தங்கள் தாலந்துகளை உபயோகித்

தார்கள். அது அவர்கள் எஜமானிடம் வைத்த விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் காட்டுகிறது. ஆனால் மூன்றாம் மனிதனிடமோ ஏனையோர் மீது பொறாமையும், அத்துடன் எஜமானிடம் விசுவாசத்தையும் கீழ்ப்படிதல் அற்ற நிலையையும் காணக்கூடியதாய் இருக்கிறது. மனிதன் செயலற்றவனாக காணப்படுவதற்கு இதுவே காரணம் விசுவாசமும் கீழ்ப்படிதலும் நம்மைப் பலப்படுத்த வல்லது எனவே கிறிஸ்து பிதாவிடம் வைந்த விசுவாசமும் கீழ்ப்படிதலுமே அவரது நிறைவான வாழ்வுக்கு காரணமாய் உள்ளன.

இவ்வுலக வாழ்க்கையை நிறைவுற முடிக்காத போதும் எனது பணியை முடித்து விட்டேன். மரணம் எனக்கு எப்பொழுது வந்தாலும் பரவாயில்லை என்று திருப்தி அடைவோரும் உள்ளனர். இதற்கு ஒரு உதாரணத்தை தருகிறேன். இளைப்பாறிய ஆசிரியர் ஒருநாள் தனது உரையாடலில் தான் ஒரு திருப்தியான வாழ்க்கையை வாழ்ந்து விட்டேன் என்று கூறி உபத்திரவமில்லாத மரணம் எனக்கு வரவேண்டும் என்று கடவுளை வேண்டுகிறேன் என்றார். அதனைக்கேட்டுக் கொண்டிருந்தவர். என்ன இப்படிக் கூறிவிட்டீர். எனது வாழ்க்கையில் செய்ய வேண்டிய அனைத்தையும் இவ்வுலகத்தில் செய்து முடித்து விட்டேன் என்று கூறியதை உம்மிடம் இருந்துதான் முதல் முதல் கேட்கிறேன் என்றார். அந்த ஆசிரியர் அதற்கு விடையாக தான் பிறந்த நாள் முதல் படித்தது, திருமணமானது, பிள்ளைகள் பெற்றது அவர்கள் வளர்க்கப்பட்ட முறை, பிள்ளைகள் திருமணம் மூலம் கரை சேர்க்கப்பட்டது. அதுவுமல்லாமல் அவர்கள் பொருளாதாரக்குறைவின்றி வாழப்போதிய பணம் சேர்த்து வைத்தது இப்படியான நிறைவுகளை கூறிமுடித்தார். அதனைக்கேட்டுக்கொண்டிருந்த அடுத்தவர் அவரைப்பார்த்து சாதாரண ஆசிரியராக இருந்து இவ்வளவு சம்பாத்தியங்களையும் எப்படிச் சம்பாதித்துக் கொண்டார்? என்று கேட்டார். அதற்கு அவர் முன்னவர்கள் மூலமாக வழி வழியே வந்த சொத்து பிள்ளைகள் இல்லாத இரு உறவினர்களின் சொத்து அறுதி ஈடு மீளாதவர்களின் சொத்து இப்படியாக சொத்துக்கள் சேர்ந்த விதத்தைக் கூறினார். மேலும் அவர் ஆசிரியர் தொழிலைப்பற்றிக் கூறும்போது அது தனக்கு மதிப்பு இருப்பதற்காக பொழுது போக்காகச் செய்யப்பட்ட வேலை என்றார். ஆசிரியர் தொழிலையே தான் நம்பியிருந்தால் ஐந்து சதம் கூடச்சம்பாத்தியம் பண்ணியிருக்க முடியாது என்றார் ஆனால் அவர் உலகத்தின் பார்வையில் ஒரு ஆசிரியர் இவர் முன்னோர்களின் சொத்துக்களின் பெலத்தால் வாழ்ந்தவர். இவர் வேண்டி நிற்பது உபத்திரவமற்ற மரணம்.

இந்த விதத்தில் தமது பணி முடிந்தது என்று கொட்டாவி விடும் மக்கள் இன்னும் நம்மத்தியில் வாழ்கிறார்கள். உபத்திரவமில்

லாத வாழ்க்கையே நாம் வேண்டும் வாழ்க்கை என்று கூறுவர் பலர். உபத்திரவப்படுகிறவர்கள் உபத்திரவப்படுவதற்கு காரணம் அவர்களின் முன் வினைப்பயன் என்பர்.

நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து சீசத்துவத்தைப் பற்றிப் போதிக்கும் போது '' ஒருவன் என்னைப் பின்பற்ற விரும் பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை எடுத் துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் '' என்றார். மேலும் அவர் '' தன் ஜீவனை இரட்சிக்கவிரும்புகிறவன் அதை இழந்து போவான் என்நிமித்தமாக தன் ஜீவனை இழக்கிறவன் அதைக்கண் டடைவான் '' மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஸ்ரப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?''

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தன் மலைப்பிரசங்கமாகப் போதித்தது பாக்கிய வசனங்களே ஆகும். அன்பு, நீதி ஆகியவற்றின் மூலம் துன்பம் வரும் என்று அதனைச்சகித்து மேற்கொள்பவர்களே பாக்கியவான்கள் என்றார். எனவே நாம் எதிர்பார்ப்பது உபத்திர வமிலாத மரணம் அல்ல. பாவத்தின் மத்தியில் வாழும் நமக்கு உபத்திரவமோ மரணமோ வந்தாலும் பரவாயில்லை. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுடன் வாழும் பாக்கியம் நமக்கு கிடைக்க வேண்டும். அவருடைய சமாதானமும் நீதியும் நமக்கு கிடைக்க வேண்டும். '' முடிந்தது '' என்று அவர் கூறி முடித்த வாழ்க்கையை நாமும் வாழ அவருடன் உடன்பாடு பண்ண வேண்டும். அவருடைய இறுதி இராப் போசனத்தின் போது அவர் நமக்காக ஏற்படுத்திய உடன் படிக்கை மூலம் அவரது சரீரத்தின் சரீரமாகவும், இரத்தத்தின் இரத்தமாகவும் இணைந்து விடுவதே என் ஆவல் என்று முழுவிசுவாசத்துடன் அவரை வேண்டி நிற்போமாக.

## ஏழாம் வார்த்தை

*லூக்கா 23:46*

'' பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக் கிறேன் '' என்றார்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து சிலுவையில் இருந்து மொழிந்த இறுதி வார்த்தை '' பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் '' என்பதாகும். இந்த வார்த்தை மனிதன் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு போதனை என்று கூறலாம். இந்த உலகத்தில் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பொறுப்பு

உண்டு. என்றும் அந்தப்பொறுப்பானது முறைப்படி உரியவரிடம் ஒப்படைக்சப்பட வேண்டும் என்றும் அறிகிறோம். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்த்துவிடம் இருந்த இந்த உண்மையை சுற்றுக்கொள் கிறோம். மனிதனுக்கு மனிதனின் தன்மையை வெளிப்படுத்த வந்த அவர் ஒரு பொறுப்பை ஏற்று வந்தவராக செயற்பட்டார். அவரது செயலில் ஒரு நோக்கம் இருந்தது. அந்த நோக்கம் பிதாவின் சித்த மாக இருந்தது. பிதாவின் சித்தத்தை நிறைவு செய்யும் மைந்தனாகச் செயல்ப்பட்டார். அதனால் தேவமைந்தன் என்ற அழைப்புக்கு கார ணமானார். அந்த மைந்தனுக்குரியதன்மையே மனிதனுச்கிருக்க வேண்டிய தன்மை என்று வெளிப்படுத்தினார். மனிதனுக்குரிய வாழ்வை முழுமையாக வாழ்ந்து காட்டி "முடிந்தது" என்றார். எல்லாவற்றையும் நிறைவுற முடித்த ஆண்டவர் தன் ஆவியை பொறுப்படன் பிதாவிடம் ஒப்புவித்தார். என்று காண்கிறோம் நமக்காக இந்த உலகத்தில் வந்து நமது பாவங்களை மீட்டு மீண்டும். இறையுறவுக்குள் இணைத்த அவரது வாழ்க்கையின் தொடக்கத்தையும் முடிவையும் நம் வரலாற்றில் கண்டோம். அவரது வாழ்க்கையின் முடிவில் இன்னொரு வாழ்க்கையின் தொடக்கத்தையும் கண்டோம். அதுதான் அவர் நமக்குக் காட்டிய புது வாழ்வு. மரணத்தை வென்று வாழும் வாழ்க்கை அது. அந்த வாழ்க்கை பொறுப்புணர்ந்து வாழும் வாழ்க்கை. அவரது நெறியை கடைப்பிடித்து வாழும் வாழ்க்கை. அந்த வாழ்க்கையை நாம் ஆரம்பிக்கும் போது பொறுப்புள்ளவர்க ளாக வாழ வேண்டும். இந்தப் பொறுப்பு தமக்கு உணர்த்தப்படும் போது அதுதான் நமக்கு கிடைத்த அழைப்பு என்றோம். இப்படி யான அழைப்புக்கு கீழ்ப்படிந்து பணியாற்றிய பலரை நாம் அறிவோம். ஆபிரகாம் முதல் இன்று வரை அத்தகைய பணியாட்களை நாம் காணலாம் அவர்கள் பொறுப்போடு குறித்த பணியை ஆற்றியிருக் கின்றார்கள். அன்று கலிலேயாவில் தொடங்கிய பணி இன்று உலகுக் கெல்லாம் பரவிவிட்டதென்றால் அது அப்பணியாட்களின் சிறப்புப் பணியே குறிக்கும்

"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்" என்ற ஆண்டவரின் வார்த்தையை நாம் அறிவோம். அதன் பொருள் என்ன? என்று கேட்போமானால் உலகத்தின் டல பணிகள் தேங்கிக் கிடக் கின்றன. ஆனால் நடைபெற்று வருப் பணிகளோ மிகவும் சொற்பம் என்பதே இதற்குக் காரணம. செயல்ப்படாத பொறுப்பற்ற மனிதர் களின் தேக்க நிலையே காரணமாகும் பொருளாதார குறைவினால், அஞ்ஞானத்தால் அடிமைத்தனத்தினால் ஊனமுற்றதனால், நம்பிக்கை யிழந்தமையால் ஆங்காங்கே மக்கள் செயல்படாதிருக்கிறார்கள். இத் தனை பேரும் தமது பொறுப்பை கடவுளிடம் ஒப்படைக்க முடியாத

வர்கள். கண்ணிருந்தும் குருடர்களாக, வாயிருந்தும் ஊமைகளாக கால் இருந்தும் முடவர்களைப் போல இப்படியே ஆண்டவர் அருமையான உறுப்புக்களையும் தாலந்துகளையும் கொடுத்திருக்க அவைகளைச் செயல்படுத்தாதிருப்பது மனிதனின் பொறுப்பற்ற தன்மையாகும். இவைகளை நன்கு செயற்படுத்தும் போது அதுவே ஒப்படையாகும். இந்த ஒப்படைப்பை கடவுள் நம்மிடத்திலிருந்து எதிர் பார்க்கிறார்.

மனிதன் தன்னைத்தான் நம்பாததினாலும் செயலற்றவனாக காணப்படுகிறான் இதற்கு ஒரு உதாரணத்தை ஒரு கதை மூலம் தருகின்றேன். ஒரு வாலிபன் தானொரு அனாதை என்ற காரணத்தினால் தனது எதிர்கால நம்பிக்கையை இழந்தவனாகக் காணப்பட்டான். அவன் மற்றவர்களின் ஆதரவில் வாழ எண்ணினான். அதிலும் அவன் திருப்தி அடையவில்லை. இறுதியாக பிச்சை எடுத்துத் தானும் வாழ வேண்டும் என்று நினைத்தவனாக யாராவது கருணை காட்டுவார்கள் என எதிர்பார்த்தான். அவனை ஒருவர் சந்தித்தார். அவர் அவனிடம் ''பிச்சை கேட்கிறாயே உனக்கு வெட்கம் இல்லையா?'' என்று கேட்டார். அதற்கு அவன் எனக்கு களவு, பொய் தெரியாது அதனால் என் பசிக்காக யாரிடமும் கேட்டு வாங்கி உண்டு வாழலாம் என்று எண்ணினேன்'' என்றான். அப்பொழுது அவர் உன்னிடம் விலையேறப் பெற்ற ஒன்றுமே இல்லையா என்றார் அதற்கு அவன் அப்படி விலையேறப்பெற்ற ஒன்று என்னிடம் இருக்குமானால் நான் ஏன் பிச்சை எடுக்க வேண்டும் என்று பதிலளித்தான். உடனே அவர் உன்னிடம் விலையேறப்பெற்ற ஒரு பொருளை காண்கின்றேன். அதை நீ எனக்குத்தர உடன்படுவாயானால் உனக்கு பலஆயிரம் ரூபாய் பெற்றுத்தர முடியும் என்றார் உடனே அவன் உணர்ச்சி வசப்பட்டவனாய் அதை எனக்கு காண்பியும் என்றான். உடனே அவர் பதிலாக கண்பார்வை அற்றவர்களாய் கண்மாற்றுச் சிகிச்சைக்காக என்று பல்லாயிரக்கணக்கான காசைக் கொடுத்து கண்களைப்பெறுவதற்கு பலர் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உன்கண்களைக் கொடுப்பாயா என்றார். இதனைக் கேட்டதும் கண்ணிருந்தும் குருடனாக வாழ்ந்த அவனது கண்கள் திறவுண்டன. தனது அவையவங்களின் பெறுமதி பல லட்சம் என்று உணர்ந்து கொண்டான். அவருக்கு நன்றி செலுத்தி நான் இனி ஒரு போதும் பிச்சை எடுக்கமாட்டேன் என்று உறுதி கொண்டான். ஆம் இத்தகைய குருட்டாட்டத்தினாலும் தன்னம்பிக்கை இழந்த நிலையிலும் எத்தனைபேரை நாம் நாளாந்தம் சந்திக்கின்றோம். இதனால்த்தான் ஆண்டவர் ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்றார்.

ஒருவன் தனது சரீரத்தையும், ஆவியையும் ஆண்டவருடையது என்று எண்ணியவனாக அதனை பரிசுத்தப்படுத்தி பொறுப்புடன்

அவருக்கென்றே வாழவேண்டும். எங்களது சரீரம் அவர் வாழும் ஆலயமாக விளங்கவேண்டும். நமது சரீரத்தை மாசுபடுத்துவதோ, கனப்படுத்துவதோ அல்லது ஆவியை சுபசித்தப்படி அழிப்பதோ கடவுளுக்கேற்றதல்ல. தற்கொலையை ஒருபோதும் அனுமதிப்பதில்லை நாம் கொல்லப்படவேண்டும் என்று தீர்ப்புப் பெற்றாலும் சாட்சியாகவே மரிக்கிறோம். என்று பலம் கொண்டவர்களாக முடிவுபரியந்தம் நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்து பாவமற்றவராக இருந்த போதிலும் சிலுவை பரியந்தம் கீழ்ப்படிந்தவராய் அனைவருக்கும் இரட்சிப்பு என்ற ஒரே நீக்கிக்காக சிலுவையில் மரித்தார் அவர் தன்னைத்தான் விடுவிக்க எண்ணியிருந்தால் அத்தனை அற்புதங்களை நடப்பித்த அவருக்கு அது பெரிதானதல்ல. ஆதித்திருச்சபையின் வளர்ச்சி பலரது ஒப்புக்கொடுத்தலாலும், இரத்தச் சாட்சி மரணத்தாலும் ஏற்பட்டது என்பது வரலாறு.

அனைவரது இரட்சிப்புக்காக அவர் ஏற்படுத்திய அந்த உடன்படிக்கையை நாம் பொறுப்புடன் நடப்பித்து அவரது சரீரத்தில் சரீரமாகவும், இரத்தத்தின் இரத்தமாகவும் அவருடன் இணைந்து எமது ஆவியை அவருக்கென்றே ஒப்புவிப்போமாக.

## உயிர்த்தெழுதல்

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்த்துவின் உயிர்த்தெழுதல் ஒரு வரலாற்று நிகழ்ச்சி. அவர் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்த கல்லறை இன்றும் திறந்த கல்லறையாக புனித ஆலயமாக காக்கப்பட்டு வருகிறது. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்த்து தனது பாடுகள், மரணம் உயிர்த்தெழுதல் பற்றி தன் பணிக்காலத்தில் உவமை மூலமும் அற்புதங்கள் மூலமும், போதனை மூலமும் வெளிப்படுத்தினார். அவரது பாடுகள் மரணம் உயிர்த்தெழுதல் ஒரு வெறும் நிகழ்வு அல்ல அது வாழ்க்கையின் பல பேருண்மைகளை வெளிப்படுத்தும் செயலாகும். பாடுகள்மரணம், உயிர்த்தெழுதல்என்பன ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் சம்பவிக்க வேண்டியதே என்பதனை அழுத்திப் போதிக்கிறார். ஏனைய மதங்களில் துன்பங்கள் இன்றி விலகி வாழும் வழிகளே போதிக்கப்படுகிறது. துன்பங்களுக்கான காரணங்கள் முன் செய்த வினைப்பயன் என்று விளக்கப்படுகிறது. ஆனால் கிறிஸ்த்தவம் துன்பியல் வாழ்க்கையில் சந்திக்கப்பட வேண்டியது என்றும் அதனைச் சகித்து வாழ கடவுளின் பெலம் கிடைக்கிறது என்றும் நம்புகிறது.

கிறிஸ்த்தவத்தைப்பற்றி கிறிஸ்த்து இயேசு தரும் போதனை " ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் " (மாற்கு 8:34) என்பதாகும் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்த்து தன்பணியினை ஆரம்பிக்க முன்னதாக நாற்பது நாள் உபவாசத்தின் பின் " மனந்திரும்புங்கள் தேவனுடைய இராட்சியம் சமீபித்திருக்கிறது " என்றார் கடவுளுடைய அரசு உண்டு என்றும் அவ் அரசுக்கு ஏற்ற மக்களாக நாம் வாழ வேண்டும் என்பது ஒரு அறை கூவலாக முன்வைக்கப்படுகிறது. எனவே மனுக்குலம் உலக அரசுக்கு மாத்திரமல்ல கடவுளுடைய அரசுக்குரியவர்கள் என்ற புதிய செய்தி கொடுக்கப்படுகிறது. அவ் அரசுக்குள் மரணத்தை கடந்து நித்தியமாக வாழும் சலாக்கியம் உண்டு என்ற நற்செய்தி தரப்படு கிறது. இந்த வாழ்வுக்கு நுளைவாயிலாக விளங்குவது எனது மனம் திரும்புதலாகும். இந்த மனமாற்ற வாழ்வு பாடுகள், மரணம் உயிர்த் தெழுதலின் அனுபவத்தை கடந்து செல்லும் வாழ்வாகும். உயிர்த் தெழுந்த ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்த்து சீடர்களுக்கு தன்னை வெளிப்படுத்திய போது உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக என்றார். இந்த சமாதானத்தைக் குறித்து காணும் போது அவர் இது பற்றிக் கூறிய போதனையை காணவேண்டும். நான் உலகம் தரும் சமாதானத்தை அல்ல என்னுடைய சமாதானத்தை உங்களிடம் வைத்துப் போகிறேன் என்றார். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் எனப்படு வார்கள் என்ற பாக்கிய வசனத்திற்கேற்ப அவரது சமாதானம் விளங்குகிறது.

சாதாரணமாக உலக வாழ்வு மரணத்துடன் முடிவடைவ தாக நம்பப்படுகிறது. அது அர்த்தமற்ற வாழ்வு. ஆனால் ஆண்ட வராகிய இயேசுக்கிறிஸ்த்து மரணம் கடந்த வாழ்வு ஒன்றை தனது உயிர்த்தெழுதலினால் விளங்கும்படி செய்தார். அது அர்த்தமுள்ள வாழ்வாக அமைகிறது. அந்த அர்த்தமுள்ள நித்திய வாழ்வு அனைத்து மனுக்குலத்துக்கும் உரியது படைப்பின் போது ஆண்டவருடைய சாயலாகப் படைக்கப்பட்ட ஆதாம் கீழ்ப்படியாமையினால் ஆண்ட வருடைய சாயலை இழந்த பாவியானான். இதனால் அவன் மண் ணுக்குரியவனானான் மரணத்தைத் தழுவிக்கொண்டான். அதனால் ஆதாமின் பாவம் மனித வாழ்வில் தொடர்ந்து வந்தது. ஆனால் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்த்துவோ பிதாவாகிய ஆண்டவரின் சாயலை இழந்து போகாத புதிய ஆதாமாக பிதாவுக்கேற்ற மைந் தனாக தன மனித வாழ்வில் கீழ்ப்படிந்து தேவமைந்தனாக வாழ்ந் தார். கீழ்ப்படியாமையினால் மனிதனுக்குள் வந்த பாவம் கிறித்து

வின் கீழ்ப்படிதலால் சமூலப்பட்டது. அவனது வாழ்வு மரணத்தோடு நின்று விடாது மரணத்தை வென்று நித்திய வாழ்வானது. பிதாவாகிய இறைவனுடன் வாழும் வாழ்வாகும். அந்த நித்திய வாழ்வுக்கு பாத்திரராகும்படி அனைத்து மனுக்குலத்தையும் அழைக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசுக்கிறித்து தனது சீடர்களுக்கு அதனை ஒரு கட்டளையாக விடுத்தார். (மத் 28:20) நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீராக்கி பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களோடு கூட இருக்கிறேன் என்றார்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து இவ் உலகத்தில் நடப்பித்த பணியினை தொடர்வதற்கு சீசர்களை தெரிந்து கொண்டார். சீசர்களின் பணி திருச்சபைப் பணியானது அத் திருச்சபை பேதுருவின் தலமையில் ஆரம்பமானது. பேதுருவிடம் உயிர்த்தெழுந்த ஆண்டவர் யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாய்'' இவ்வாறாக அவர் மூன்று தடவை கேட்டதால் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என் ஆடுகளை மேய்ப்பாயாக என கிறிஸ்த்து கூறியதையும் (யோவான் 21: 15-18 இல் காணலாம். மக்கள் மீது காட்டப்பட வேண்டிய அன்பின் உத்தரவாதம் விளக்கப்படுகிறது. ஒருவன் கிறிஸ்த்துவுக்குள் இருந்தால் அவன் புதிய வானத்தை புதிய பூமியை காண்பான். இதுவே உயிர்த்தெழுதலின் அனுபவமாகும்.

---

அச்சுப்பதிவு: சௌந்தரம் அச்சகம் பிரதான வீதி, மானிப்பாய்.